Regd. M. No. 5954 Phone No. 21841

ஜனசக்தி

ஆசிரியர்: ப. ஜீவானந்தம் JANASAKTHI

(வெளியூர் பதிப்பு)

மலர் 15 இதழ் 318] சென்னை 6-7-59 விகாரி௵ ஆனி௴ 22உ திங்கட்கிழமை [4 பக்கங்கள் 7 காசுகள்

கேரளக் கிளர்ச்சிக்கு ம. பொ. சி., கங்காதரன் கண்டனம்



இந்தியாவில் ரஷிய தூதராக நியமிக்கப்பட்டுள்ள இவான் அலெக்ஸாண்டரோவிச் பெனிடிக் டோவ் தனது அத்தாட்சிப் பத்திரங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கிறார். (ஜூலை 3)

அந்நியப் பாதிரிகளின் விஷமம்

நோயாளிகளை மதமாற்றம் செய்ய நிர்ப்பந்திக்கின்றனர்

புதுடெல்லி, ஜூலை 3—

மலைஜாதியினர் பிற்பட்ட பகுதியினர் வாழும் பகுதிகளில் அந்நிய நாடுகளிலிருந்து வந்துள்ள பாதிரிகள் செய்து வரும் வேலைகள் தேசியத்திற்கே அபாயத்தை விளைவிக்கும் என்று சர்வதேச ஆர்யன் லீக் ஓர் அறிக்கை விடுத்துள்ளது.

பிலாஸ்பூருக்கு சமீபத்திலுள்ள அமெரிக்க பாதிரிகள் நடத்தி வரும் குஷ்டரோக ஆஸ்பத்திரியில் வரும் நோயாளிகளை நிர்ப்பந்தமாக மதமாற்றம் செய்யுமாறு பாதிரிகள் வலியுறுத்துவதாக இந்த நோயாளிகள் மத்தியப் பிரதேச கவர்னரிடம் புகார் செய்துள்ளனர்.

மதம் மாற விரும்பாத நோயாளிகளுக்குச் சரிவர உணவு கொடுக்கப்படாமல் பல தொல்லைகளைக் கொடுக்கின்றனர்.

இந்த நோயாளிகள் 2 மைல் தூரம் நடந்து வந்து கவர்னரிடம் இது பற்றிப் புகார் செய்துள்ளனர். இதுபற்றி விசாரிப்பதாகக் கவர்னர் அவர்களுக்கு உறுதியளித்தார்.

ஹார்வி மில் தகராறு

பேச்சுவார்த்தை நடக்கிறது

சென்னை, ஜூலை 5—

ஹார்வி மில் தகராறு சம்பந்தமாகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஹார்வி நிர்வாகத்தின் பிரதிநிதிகள் லேபர் கமிஷனர் காரியாலயத்தில் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இப் பேச்சுவார்த்தைகள் மேலும் தொடர்கிறது.

11 பஸ்களுக்கு டிரைவர்கள் இல்லை!

சென்னை, ஜூலை 4—

சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து இலாகாவைச் சேர்ந்த 11 பஸ்கள் போதிய அளவு தகுதியான டிரைவர்கள் கிடைக்காததால் ஓடாது நிற்கின்றன என அரசாங்க போக்குவரத்து டைரக்டர் திரு. டி. சீனிவாசன் அறிவித்துள்ளாம்.

தனி சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கவே ராஜினுமா, மறுதேர்தல் என பேசுகிறார்கள்

சென்னை நகர மலையாளிகளின் ஜனநாயகப் பாதுகாப்பு மகாநாடு

சென்னை, ஜூலை 4—

"இன்று கேரளத்தில் நடப்பது பொதுஜனப் போராட்டம் அல்ல. பொது ஜனங்களுக்கு எதிரான போராட்டமாகும். உண்மையில் கூறப்போனால் அங்கு வர்க்கப் போர் நடக்கிறது. நாயர் சொஸைடி பத்மநாபனும், கத்தோலிக்கப் பாதிரிகளும் இதில் கலக்காவிட்டால் இது ஒரு வர்க்கப் போராட்டம் என்பதைத் தெளிவாகப் பார்க்க முடியும்.

கேரளத்தில் நடந்து வரும் வர்க்கப் போராட்டத்தை மத்திய சர்க்காரின் உதவி கொண்டு நசுக்க சதி வேலைகள் நடந்து வருகின்றன" என்று முன்னாள் திரு-கொச்சி சட்டசபை சபாநாயகர் திரு. கங்காதரன் அவர்கள் குற்றம் சாட்டினார்.

சென்னை ஜனநாயகப் பாதுகாப்புக் கமிட்டியின் சார்பாக நேற்று இராயப்பேட்டை ஒய். எம். ஐ. ஏ. மண்டபத்தில் கேரளக் கல்விச் சட்டத்தை ஆதரிக்கவும், கேரளத்தில் எதிர்க்கட்சிகள் புரிந்துவரும் அராஜக அட்டூழியங்களைக் கண்டிக்கவும் சென்னை நகர மலையாளிகளின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு திரு கங்காதரன் அவர்களே தலைமை வகித்தார். சென்னைநகர கேரள சமாஜத்தின் தலைவர் திரு சி. ஆர். கிருஷ்ணபிள்ளை அனைவரையும் வரவேற்றார். கூட்டத்துக்கு ஏராளமான மலையாளிகளும் தமிழர்களும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், கலைஞர் டி. கே. ஷண்முகம், சுயேச்சையாளர் ஜனாப் பிஜாபுரி, பிரஜாவுரிமை சங்கத் தலைவர் திரு. எஸ் கிருஷ்ணமூர்த்தி எம். சி, தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர் சம்மேளனப் பொதுச்செயலாளர் திரு. வி. ராமுண்ணி, பாராளுமன்ற உறுப்பினர் தோழர் வி. பி. நாயர், தோழர் முகவை ராஜமாணிக்கம் ஆகியோர் பேசினார்கள். கூட்டத்தினர் அளவு கடந்த உற்சாக உணர்ச்சியுடன் கரகோஷம் செய்து தலைவர்களின் பேச்சுக்களை ஆமோதித்தார்கள்.

காங்கிரஸ் கட்சிக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை

தலைவர் திரு. கங்காதரன் கேரள சர்க்காரின் கல்விச் சட்டத்தில் கண்டுள்ள அம்சங்களை விளக்கி இதில் மதத் தலையீடு எங்கே இருக்கிறது என்று கேட்டார். "மதவெறியர்களையும் ஜாதி வெறியர்களையும் சொத்துடைமை வர்க்க பிற்போக்கு சக்திகளையும் பயன்படுத்திக்கொண்டு கேரளத்தில் காங்கிரஸும் இதர எதிர்க்கட்சிகளும் அராஜகச் செயல்களில் இறங்கியுள்ளன. காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு கேரளப் பிரச்சினையில் பாரபட்சமாகவே நடந்துள்ளது. காங்கிரஸுக்கு இப்பொழுது பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை. பலாத்காரம் மூலமாக அல்லாமல், பார்லிமெண்டரி ஜனநாயகம் மூலம் கம்யூனிஸம் வருமென்றால் நான் அதை வரவேற்கிறேன" (கரகோஷம்) என்றார்.

மக்கள்முன் நிரூபிக்கப்படும்

இறுதியாகப் பேசுகையில், "கேரள சர்க்கார்மீது இன்னின்ன குற்றங்கள் இருக்கின்றன என்று மத்திய சர்க்காரும் காங்கிரஸ் கட்சியும் மக்கள்முன் நிரூபித்தால் நான் எனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்" என்று பலத்த கரகோஷத்திற்கிடையே கூறி முடித்தார்.

ம. பொ. சி.

அடுத்து தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. பேசினார். அவர் பேசுகையில், சில முக்கியமானதும், எக்கச்சக்கமானதுமான கேள்விகளை எழுப்பி, மக்களின் கரகோஷ ஆரவாரத்தைப் பெற்றார். அவர் பேசியதாவது:—"கேரளத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால், வெறும் இனச் சண்டைகள் தான் இருந்தன. குமரிமுனை மலையாளத்துக்கு வேண்டுமென்று மலையாளிகளும் விட்டேனா பார் தேவிகுளத்தை என்று தமிழர்களும் கூட்டங்கள் நடத்தி ஆர்ப்பாட்டம் செய்து எல்லைச் சண்டைகளில் இறங்கியிருந்தோம். நானே பல கூட்டங்களை நடத்தியிருக்கிறேன். கம்யூனிஸ்ட் ஆட்சி வந்த பிறகுதான் இனப் பூசல்கள் ஒழிந்து தமிழர்களும் மலையாளிகளும் ஒன்று சேர்ந்து இங்குகூடியிருக்கிறோம். இன்று இனச் சண்டை இல்லை. கொள்கைச் சண்டைதான் இருக்கிறது. இந்தக் கொள்கைச் சண்டையில் தேசிய காங்கிரஸ் இறங்கியிருக்க வேண்டும். ஆனால் அதில் தேசியமில்லாததால் வகுப்புவாதிகளுடன் கலந்திருக்கிறது

யார் யாருக்கும் சண்டை

கேரளத்தில் நடப்பது காங்கிரஸ், கம்யூனிஸ்ட் சண்டை அல்ல. அப்படியிருந்தால், டாக்டர். சுப்பராயன் போன்ற காங்கிரஸ் எம். பி. கேரளக் கிளர்ச்சியைக் கண்டித்திருப்பாரா? மாட்டார். கேரளத்தில் இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சண்டை இல்லை. அப்படியிருந்திருந்தால் முஸ்லீம் லீக் சேர்ந்திருக்காது. கேரளத்தில் நடப்பது கம்யூனிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்ட் அல்லாதவர்களுக்குமிடையே நடக்கும் சண்டையுமல்ல. அப்படியிருந்திருந்தால் கம்யூனிஸ்ட் அல்லாத எந்த

னையோ பேர் கேரளக் கிளர்ச்சியைக் கண்டிப்பார்களா? சுருங்கச் சொன்னால் அங்கு நடப்பது என்ன? நாணயமான அரசியல்வாதிகளுக்கும் நாணயமற்ற அயோக்கிய அரசியல் வாதிகளுக்கு மிடையே தான் போராட்டம் நடக்கிறது.

கேரளக் கிளர்ச்சி வெற்றி பெற்றால், ராஜாஜி கூறியது போல், 'இந்தியாவில் ராணுவ ஆட்சிக்கு வழி திறந்து விடுவதாகும்.

ஜனாதிபதி தலையிடுவது சட்ட விரோதமாகும்

இந்தியக் குடியரசு மதச் சார்பற்ற குடியரசு ஆகும். ஆகலால் கல்வியிலும் மதங்கள் நுழையக் கூடாது என்பதே இதன் நோக்கம். அப்படியிருக்க, மத ஸ்தாபனங்கள் தலையிட்டு, கலகம் செய்வார்களேயானால், அதற்கு தலைவணங்கி ஜனாதிபதி ஆட்சி ஏற்படுமேயானால், அந்த ஜனாதிபதி சட்ட விரோதமாக நடக்கிறார் என்றே அர்த்தமாகும். சுப்ரீம் கோர்ட்டினால் திருத்தப்பட்டு, ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு சட்டசபையால் நிறைவேற்றப்பட்டதொரு சட்டத்தை ஜாதி, மத ஸ்தாபனங்கள் எதிர்க்குமேயானால், அந்த ஸ்தாபனங்களை ஜனாதிபதி சட்டவிரோதமாக்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், அந்த ஸ்தாபனங்களுக்கு தலைவணங்கினால் உலக மக்கள் மன்றத்தின் முன்னால் ஜனாதிபதி பதில் சொல்லியாக வேண்டும். அதன் விளைவாகத்தான் நான் இந்த மேடையில் நிற்கிறேன்.

தேதி வைத்து, மணியடித்தா பொதுஜன எழுச்சி வரும்?

"பொதுஜன எழுச்சி கேரளத்தில் இருப்பதாகக் கூறுகிறார்கள், பொதுஜனப் புரட்சிகளும் எழுச்சிகளும் தேதி வைத்து வருவதைக் கண்டதுண்டா? அல்லது மணியடித்துதான் வருவதுண்டா? (சிரிப்பு)

மறு தேர்தல் எதற்கு?

மறு தேர்தல் வைக்கவேண்டுமென்கிறார்கள், வைத்தால், அதில் கம்யூனிஸ்டுகளே மீண்டும் ஜெயித்தால், அதன் பிறகு காங்கிரஸ்காரர்கள் இதுபோல் கிளர்ச்சி செய்யாமலிருப்பார்களா என்று கேரளக் காங்கிரஸ் தலைவர் சங்கரை ஒருவர் கேள்வி கேட்டபோது, "அப்போதும் கிளர்ச்சி தொடர்ந்து நடக்கும்" என்று பதில் அளித்தார். அப்படியானால் மறு தேர்தல் எதற்கு? மக்களின் தீர்ப்பை மதிப்பவர்களா இவர்கள்?

இவர்கள் ஜெயிக்க முடியுமா?

கேரளத்தில் உள்ள எந்த எதிர்க்கட்சியாவது தேர்தலில் மெஜாரிட்டி ஸ்தானங்கள் பெற முடியுமா; முடியும் என்று எக்கட்சியும் சொல்லவில்லை அப்படியானால் பி. சோ. என்றும், லீக் என்றும், பு. சோ. என்றும், கத்தோலிக்கர், நாயர் சங்கங்கள் என்றும் ஏன் வெவ்வேறு பெயரும், வெவ்வேறு கொடியும் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அனைத்தையும் கலைத்து விட்டு காங்கிரஸில் சேருவது தானே! காங்கிரஸ் கம்யூனிஸ்ட் என்று இருகட்சிகளாகப் பிரிந்து கொள்கையைச் சொல்லி ஓட்டுக் கேட்கட்டும்.


மிரட்டுகிறார்கள்

மறு தேர்தலிலும கம்யூனிஸ்ட் ஜெயித்துவிட்டாலும், கிளர்ச்சி நடத்துவோமென்று கேரளக் காங்கிரஸ் தலைவர் கூறியதின் அர்த்தமென்ன?

வாக்காளர்களே! நீங்கள் காங்கிரஸைத் தேர்ந்தெடுக்காவிட்டால் அமைதியாக உங்களை வாழ விடமாட்டோம். கலாட்டா தான் செய்து கொண்டிருப்போம்" என்றல்லவா அதன் அர்த்தம். இது பொது மக்களை மிரட்டுவதல்லவா!

54 சதவிகிதம் படித்த மக்களைக் கொண்ட கேரளத்தில்—

(4-ம் பக்கம் பார்க்க)



கேரளத்தில் எதிர்க்கட்சிகளின் "அஹிம்சா பூர்வமான" கிளர்ச்சியின் ஒரு பகுதியாக பள்ளியொன்று எரியும் காட்சி.

காங்கிரஸின் சாயம் வெளுத்துப்போகும்

மத்திய சர்க்கார் தலையீடு ஏற்படுவதன் விளைவு

அஜய் கோஷ் விளக்கம்

பங்களூர், ஜூலை 3—

அஜய் கோஷ் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் கேரளத்தில் மத்திய அரசாங் தலையீடு ஏற்படுமெனில் 'காங்கிரஸ் கட்சியின் உண்மை நிறம் திட்டவட்டமாகத் தெளிவாகத் தெரிந்துபோகும் என்று வியாழக்கிழமையன்று டெக்கான் ஹெரால்ட் பத்திரிகை நிருபருக்களித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

எந்த வழிமுறைகளைக் கையாண்டபோதும் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்; பதவியைப் பெறவேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் அபிப்பிராயம் என்றார் அவர்.

அஜய் கோஷ் பேசுகையில் பம்பாய் இருமொழி ராஜ்ய அமைப்பை எதிர்த்துக் கிளர்ச்சி நடந்தபோது பார்லிமெண்டின் ஒரு சட்டத்தை எந்தவித நேரடி நடவடிக்கை மூலமும் மாற்றி விட முடியாது என்று பிரதமர் நேரு கூறியுள்ளதை நினைவுபடுத்தினார். மாறாக, கேரள அமைச்சர் இந்தப் பிரச்சினைகள்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்றும் கூறியுள்ளார், ஆனால், கத்தோலிக்கப் பாதிரிமார்களும், நாயர் சர்வீஸ் சொசைட்டியும் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு என்ன முடிவை எடுக்கப் போகிறது என்பதை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால் பம்பாய் விஷயத்தில் பார்லிமெண்டின் முடிவைமாற்ற முடியாது என்று ஒரு தீர்மானம் எடுத்த பார்லிமெண்டரி போர்டு கேரள விஷயத்தில் அப்படி நடக்க முன்வரவில்லை. சட்டத்தை ஒத்தி போடப்படவேண்டும் என்று கூறி கிளர்ச்சிக்காரர்களுக்கு ஊக்கம் கொடுக்கிறார்கள்.

கிளர்ச்சிக்காரர்கள் அரசாங்கத்தின் யோசனையை ஏற்க மறுப்பது கண்டுதான் ஆச்சரியப்படவில்லை என்றும், ஏனென்றால் அவர்கள் இப்படிச் செய்ய வேண்டும் என்று காங்கிர[illegible] பார்லிமெண்டரி போர்டு அவ[illegible]களுக்கு உற்சாகம் கொடுத்து[illegible]ளது.

கம்யூனிஸ்ட் சர்க்கா[illegible] மேல் அவர்களுக்கு என்[illegible] தான் புகார்கள் இருந்[illegible] போதும், காங்கிரஸ் கட்[illegible] குழந்தைகளின் படிப்பை வை[illegible]துக் கொண்டு விளையாடுகிற[illegible] என்று அவர் சொன்னார்.

கம்யூனிஸ்ட் கட்சி தன[illegible] கொள்கையை மாற்றிக் கொ[illegible]ளுமா என்று கேட்கப்பட்[illegible] போது எங்கள் கொள்கை[illegible] மாற்ற வேண்டுமென்று எ[illegible]வித அபிப்பிராயமும் இ[illegible]யாது. காங்கிரஸ் கட்சி என்[illegible] தான் செய்த போதும் எ[illegible]களுக்கு மேலும், மேலும் ஜ[illegible]நாயக ஆதரவு கிடைத்து வ[illegible]கிறது என்றும் அவர் குறிப்பி[illegible]டார்.

காங்கிரஸ், பி. எஸ். பி[illegible] முஸ்லீம் லீக், நாயர் சர்வீ[illegible] சொசைட்டி ஆகியவற்றின் தே[illegible]தல் உடன்படிக்கை பற்றி குறி[illegible]பிடுகையில், இந்த ஒப்பந்த[illegible] முஸ்லீம் லீகிற்கு அகில இந்தி[illegible] முக்கியத்துவம் கொடுக்கப்படும்[illegible] இது மிகவும் ஆபத்தான[illegible] என்று அஜய் குறிப்பிட்டார்.

மாணவர்களைத் தாக்கினர்

விதுர. ஜூலை 3—

விதுர என்னுமிடத்தில் இருக்கும் உயர்தரப் பாடசாலையை சுமார் 180 காங்கிரஸ்காரர்கள் முற்றுகையிட்டுக் கொண்டு ஆசிரியர்-மாணவர்களைத் தாக்கினர். மாணவிகளும் தாக்கப்பட்டனர். மேஜை நாற்காலிகளை உடைத்தனர். விசேஷப் போலீஸ் ஸ்தலத்திற்கு விரைந்து சிலரைக் கைது செய்தது.

இந்த அட்டூழியத்தைக் கண்டித்து மாணவர்கள் கூட்டம் நடத்தினார்கள்.

முஸ்லீம்களின் பள்ளிக்கூடத்திலும்

கழக்குட்டம். ஜூலை 3—

கனியாபுரம் என்னுமிடத்திலிருந்து பி. சோ.க்கள் தூண்டுதலால் ஒரு கோஷ்டியினர் ஆபாசமான கோஷங்களை முழக்கிக் கொண்டு இங்குள்ள முஸ்லீம் உயர்தர பள்ளிக்கூடத்தை ஆக்கிரமித்தனர். ஆசிரியர்களையும் மாணவர்களையும் அடித்துத் தொல்லை கொடுத்தனர். போலீஸ் வருவது தெரிந்து பிறகு ஓ[illegible] போனித்தனர்.

பள்ளிக்கூடத்தை இடித்தனர்

ஆசிரியர் மாணவர்களை அடித்து துரத்தின[illegible]

கடப்பாரை கைத்தடிகளுடன் காங்கிரஸ்காரர்கள் அட்டூழியம்

கொல்லம், ஜூலை 3—

மங்காடு யூ பி. பள்ளிக்கூடத்தில் நேற்று நடுப்பகல் ஒரு காங்கிரஸ் கோஷ்டியினர் ஆக்கிரமிப்புச் செய்தனர். ஆசிரியர்களையும் மாணவர்களையும் அடித்துத் துரத்தினர்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் மறியல் செய்திருந்தவர்களைப் போலீசார் கைது செய்து கொண்டு போன பிறகு இந்த சம்பவம் நடைபெற்றது. மறியலை சட்டை செய்யாமல் மாணவரும் ஆசிரியர்களும் பள்ளிக்கூடத்தை நடத்தியது இந்த ஆத்திரக்காரக் கும்பலுக்குப் பிடிக்கவில்லை.

ஹெட்மாஸ்டரைக் கொன்று விடுகறேன் என்று கடப்பாரையுடன் ஒரு காங்கிரஸ் குண்டன் சென்றபோது ஆசிரியர் ஒருவர் ஹெட்மாஸ்டர் இருந்த அறையை மூடித் தாளிட்டுவிட்டார். வெறி பிடித்த காங்கிரஸ் குண்டர்கள் மேஜை நாற்காலிகளை உடைத்தும் ஜன்னல்களைப் பெயர்த்தும் பள்ளிக்கூடச் சுவர்களைப் பல இடங்களில் இடி[illegible]தும் அட்டூழியம் விளைத்திருக்[illegible]றார்கள்.

பள்ளி மாணவர்கள் கூச்சலிட்டதை ஓட்டி ஊர் ஜனங்க[illegible] திரண்டு வருவதைக் காண[illegible] இந்த குண்டர்கள் கம்பி நீட்[illegible] விட்டார்கள். போலீஸ் ஸ்தல[illegible]திற்கு விரைந்தபோது ஒரு குண்டன்மட்டும் அகப்பட்டான்.

இவ்வாறு பள்ளிக்கூடங்களில் அட்டூழியம் நடத்த கொல்ல[illegible] பிஷப்பும் வேறு குருமார்களு[illegible] கூட்டங்கள் நடத்தத் தூண்டி[illegible]யுள்ளார்கள் என்று தெரிகிறது.

கேரளத்தில் நடைபெறுகிற கிளர்ச்சி நேரு தலைமையில் நடக்கும் கலவரம்

திரு. உ. முத்துராமலிங்கத் தேவர் கண்டனம்

சிவகாசி. ஜூலை 2—

கேரளத்தில் நடைபெறும் கிளர்ச்சியை தலைமை அமைச்சர் நேரு ஆதரிப்பது தவறாகும் என்று ஜனநாயக காங்கிரஸ் தலைவர் பசும்பொன் திரு. உ. முத்துராமலிங்கத் தேவர் கூறினார்.

கோவில்பட்டியில் சாத்தூர் வட்டார இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் மகாநாட்டை முத்துராமலிங்கத்தேவர் தொடங்கி வைத்தார்.

அவர் கேரளத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், தலைமை அமைச்சர் நேருவின் நடவடிக்கைகளைக் கண்டித்தார். கேரளாவில் நடைபெறுகிற கிளர்ச்சி, நேரு தலைமையில் நடைபெறும் அரசியல் கலவரம் என்று அவர் கூறினார்.

உலகத் தலைவர்களில் ஒருவராகிய நேரு, கேரளாவில் நடைபெறுகிற கிளர்ச்சியை ஆதரிப்பதின் மூலம் தவறான வழியில் செல்லகூடாது. பொதுவுடைமையை முழுமூச்சாக எதிர்ப்பவர் நேரு. இந்தியாவின் தலைமை நீதிமன்றத்தாலும் குடியர[illegible]

கல்வி மசோதாவை, காங்கிரஸ் தலைவர்கள் எதிர்ப்பதோ, திரும்பத் தேர்தல் நடத்தவேண்டுமென்று கோருவதோ கூடாது" என முத்துராமலிங்கத் தேவர் கூறினார்.

'தினமணி' காரியாலயத்தில் போலீஸ் சோதனையாம்

கொல்லம், ஜூலை 4—

கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஆர். சங்கரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ஸ்தல மலையாள தினசரியான 'தினமணி'யின் காரியாலயத்தில் இன்று போலீசார் சோதனை நடத்தியதாக அத்தினசரியின் மானேஜர் அறிவிக்கிறார்.

இரு சப்-இன்ஸ்பெக்டர்கள் இரண்டு மணி நேரம் சோதனை நடத்தினரென்றும் கடந்தமாதம் அப் பத்திரிகையின் கோவை நிருபர் அனுப்பிய செய்தியின் கையெழுத்துப் பிரதியை எடுத்துச்சென்றனரென்றும் மானேஜர் கூறினார். —பி டி ஐ.

கொழும்பு துறைமுக வேலை நிறுத்த நிலவரம்

கொழும்பு, ஜூலை 4—

கொழும்பு துறைமுகத்தில் 20 நாட்களாக வேலை நிறுத்தம் நடக்கிறது.

வேலைநிறுத்தம் புரிந்தவரில் ஒரு பிரிவினர் பிரதமர் பண்டாரநாயகாவின் சமரச திட்டத்தை ஏற்றுக்கொண்டு வேலைக்குத் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

டிராட்ஸ்கியட் தலைமையில் உள்ள தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர் வேலைக்குத் திரும்பவில்லை

இன்று காலை வேலை நிறுத்தம் புரியும் தொழிலாளரில் 25 பேர் போலீசாரால தாக்கப்பட்டனர். —ராய்ட்டர்.

அரசியல் சட்டத்திற்கே ஆபத்து

டைம்ஸ் ஆப் இந்தியா கட்டுரை

பம்பாய், ஜூலை 1—

இன்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' தினசரியில் பி. வி. ர்கேஸ் எழுதுவதாவது :—

இந்தியாவின் அரசியல் அமைப்பு சட்டத்திற்கே சோதனை காலம் ஏற்பட்டிருக்கிறது. இது மிகைப்படுத்தக் கூறல் அல்ல. கேரள ராஜ்யத்தில் சம்பவங்கள் நடந்துகொண்டே வருகின்றன. என்ன நடக்கும், என்ன நடக்காது என்ற நிச்சயமே இல்லை. ஆனால் மேலும் நிலைமை மோசமாக மாறுமானால் அபாயகரமாக முடியும் என்ற ஒரு கட்டம் வந்துவிட்டது. பெரும் மதிப்பிற்குரிய இன்று கேரள ராஜ்யம் ஆராய்ச்சிக் கூடமாகிவிட்டது.

காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டின் முடிவு விபரீதமானது; பார்லிமெண்டரி அரசாங்கங்களின் கோர்ட் போலிருக்கிறது. அந்த காங்கிரஸ் போர்டு தாக்கவே கடைபுகிறது. தாக்கி, காயமேற்படுத்தல் என்ன செய்வதென்றும் பேசுகிறது. பல தினங்களாக நடத்தி நிறைவேற்றப்பட்ட அப்போர்டின் தீர்மானம் விதண்டாவாதம் புரிகிறது. கேரள மக்களில் பெரும்பான்மையோர் நம்பிக்கையைக் கம்யூனிஸ்ட் சர்க்கார் இழந்துவிட்டதாக அத்தீர்மானம் கூறுகிறது. ஜனநாயக ரீதியில் பரிகாரத்தை அப்போர்டு தெரிவித்துள்ளது. புதுத்தேர்தல் நடத்தப்படவேண்டுமாம்! அது வேறு விஷயம். ஆனால் தோழர் நம்பூதிரிபாட் மறுக்கிறார். ஆகவே கேரள காங்கிரஸ் தனது கிளர்ச்சியை நீடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

"காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு நிறைவேற்றியுள்ள இத் தீர்மானம் என்ன அப்பட்டமாக தண்டுபடுத்துகிறது? கிளர்ச்சி தீவிரப் படுத்தப்படவேண்டும். அப்படி நடந்தால், மத்திய சர்க்கார் தலையிட நியாயம் உண்டு என்ற கருத்தைத் தரும் வகையில் இதை முன்கூட்டியே மறைமுகமாக அறிவிப்பதுபோலவா இருக்கிறது காங்கிரஸ் பார்லிமெண்டரிபோர்டின் தீர்மானம்?

இதர ராஜ்யங்களில் இவ்வித நிலைமை ஏற்பட வழி

"அரசியல் அமைப்புச் சட்டத்தில் இல்லாத நிர்ப்பந்தம் கேரளத்தில் நியாயமாகுமானால், சட்டசபை மூலமல்லாமல் இதர ராஜ்யங்களில் சர்க்காரை நீக்குவது நியாயமாகுமானால், இதர ராஜ்யங்களிலும் இவ்விதம் நடப்பது நியாயமே ஆகும். ஒவ்வொரு கட்சியோ, கோஷ்டியோ அல்லது தனிநபரோ தனது அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தக் கிளர்ச்சி நடத்தலாம்; நேரடி நடவடிக்கையில் இறங்கலாம்; சத்தியாக்கிரகம் செய்யலாம்; இதர நிர்ப்பந்தங்களைக் கையாளலாம். இவற்றில் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு தீர்மானம் இடம் தருகிறது. சட்டசபைகள் சக்தி இழந்துவிடும். பஞ்சாபில் பிரிவினைக் கிளர்ச்சியையும் எதிர்ப்பு கிளர்ச்சியையோ, ஹிந்தி கிளர்ச்சியையோ, உ.பி.யில் உணவு கிளர்ச்சியையோ, டாக்டர் லோஹியாவின் போராட்டத்தையோ கண்டனம் செய்வது சாத்தியமல்லாமற் போய்விடும். சம்யுக்த மகாராஷ்டிர சமிதியும் கிளர்ச்சி நடத்தலாம்: அதை ஆட்சேபிக்க முடியாது. கிளர்ச்சிகளுக்கும் போட்டிக் கிளர்ச்சிகளுக்கும் முடிவே இல்லாமற்போய்விடும்."

அணு, ஜலவாயு குண்டுகளைத் தடைசெய்க!

அமெரிக்க உருக்கு ஆலைகளில் வேலை நிறுத்தம்

நியூயார்க், ஜூலை 2—

அமெரிக்காவிலுள்ள உருக்கு ஆலைகளில் வேலைசெய்து வரும் தொழிலாளர்கள் திரள்திரளாக வேலை நிறுத்தம் செய்து தொழிற்சாலைகளை விட்டு வெளியேறி வருகிறார்கள். பென்ஸில்வேனியா, ஓஹியோ பகுதிகளுட்பட 30, ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஜப்பான் மகாநாட்டிற்கு வருமாறு சமாதான சக்திகளுக்கு அழைப்பு!

டோக்கியோ, ஜூன் 2—

அணு, ஜலவாயு குண்டுகளுக்கு எதிரான 5வது உலக மகாநாட்டிற்கும், ஹிரோஷிமாவிற்குச் செல்லும் சமாதான அணிவகுப்பிற்கும் வருமாறு, அணு, ஜலவாயு குண்டுகளுக்கெதிரான ஜப்பானியக் கவுன்சில் உலக மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

அணு ஆயுதங்களைத் தடை செய்யவேண்டுமென்ற, மனித குலத்தின் திடமான விருப்பத்தைத் தெரிவிக்கும் வகையில் நடைபெறும் உலக ரீதியான ஆர்ப்பாட்டத்தின் கேந்திர ஸ்தலமாக ஹிரோஷிமாவிலேயே நடைபெறும்.

அபாயகரமான போக்கு!

சிறு தேசங்கள் அணு ஆயுத மயமாக்கப்படவேண்டுமென்ற அபாயகரமான போக்குகள், சமீப காலத்தில் மேலும் முற்றி வருகின்றன. இச்சமயத்தில் இப்படிப்பட்ட இரட்டை நடவடிக்கைகளின் அவசியத்தை ஜப்பானியக் கவுன்சில் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

முன்னமேயே, மேற்கு ஜெர்மனி தனது படைகளை அணு ஆயுத மயமாக்கத் தொடங்கி விட்டது.

இவ்வுதாரணத்தை ஏனைய ஐரோப்பிய நாடுகளான, பிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, ஸ்வீடன் ஆகியவையும் பின்பற்றுகின்றன.

இதே பாதையைத்தான் ஜப்பானும் பின்பற்றுகிறது. அணு ஆயுதங்கள் வைத்திருப்பது, சமாதான உடன்படிக்கையின் நிராயுதபாணியாக்கும் ஷரத்திற்கு முரண்பட்டதல்ல என அண்மையில் பிரதமர் கிஷி பிரகடனப்படுத்தியுள்ளார். "கொடு, தற்காப்பு விடுதி" யானது இவ்வகையில் தனது உறுப்பினர் தொகையை விரிவு படுத்திக்கொள்கிறது. "திரும்ப வழியே இல்லை" என்ற நிலையை அடைவதற்கு முன்பாக கடமைப்பூர்வமான உரத்த குரல் எழுப்பப்பட வேண்டும். உண்மையான மனித நல உரிமைக்காக, அணு ஆயுத பேரழிவினின்று மனிதனைத் தப்புவிப்பதற்காக சகல நாடுகளிலும் வளர்ந்து வரும் நடவடிக்கைகளையும், தீவிரப்பட்டு வரும் சிக்கல்களையும் நாம் கண்டு வருகிறோம்.

அனுபவத்தின் பாடம்!

உலக அரசியல்வாதிகள் இக் கூக்குரலைக் கேட்குமாறு செய்ய இதுதான் நல்ல தருணம் இந்த சகாப்தத்தில் ஏற்படும் அழிவு எவ்வளவு பயங்கரமான முடிவுகளைக் கொண்டுவரும் என்பதற்கு ஹிரோஷிமாவும், நாகசாகியும் சிறந்த காட்சி ஸ்தலங்கள்.

சகல மனிதர்களுடையவும் கண்டனத்தைத் தொனிக்க ஒரு சர்வதேச அணிவகுப்பை ஹிரோஷிமாவில் நடத்துவது பொருத்தமான வாய்ப்பாகும்.

உண்மைநிலை என்ன?

அணு ஆயுத யுத்த அபாயத்திற்கெதிரான உலகு தழுவிய ஒரு இயக்கத்தின் தன்மையைப் பற்றி, நிச்சயமும் யதார்த்த உணர்வும் நமக்கு இருக்கவேண்டும். அபாயத்தின் வகை எளிமையாக இருப்பினும் சக்தி வாய்ந்த செயல் திட்டம் ஒன்றை வகுக்க, உஷாரான நிர்ணயிப்பும், விவாதமும் தேவைப்படும் அளவிற்கு நிலைமை மோசமாகவும் குழம்பியும் உள்ளது.

இக்கருத்துடனேயே கீழ்க்கண்ட திட்டத்தை ஜப்பானியக் கவுன்சில் முன்வைக்கிறது.

சமாதானத்திற்காகப் பணியாற்றுகின்ற சகல ஸ்தாபனங்களையும், ஹிரோஷிமா மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஜப்பானியக் கவுன்சில் அழைக்கிறது. இம்மகாநாடு இவ்வருடம் ஆகஸ்டு 1-ந் தேதி முதல் 6-ந் தேதி வரை ஹிரோஷிமாவில் நடைபெறும்.

ஹிரோஷிமா!

உலகெங்குமுள்ள சமாதான சக்திகளின் ஒரு அடையாள ஸ்தலமாக ஹிரோஷிமா விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

சமாதான யாத்திரை

இது ஒரு புதிய சர்வதேச சமாதான யாத்திரையாகும். ஜூலை இருபத்தைந்தாம் தேதி முதல் பிரதிநிதிகள் டோக்கியோ வாத் தொடங்குவார்கள். அன்று முதல் ஆகஸ்டு பதினைந்தாம் தேதி வரை தொடர்ந்து பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜூலை கடைசியிலிருந்து ஜப்பானின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் சிறு சிறு யாத்திரை கோஷ்டிகளாக ஹிரோஷிமாவிற்கு வருவார்கள்.

பத்து லட்சம் பேர்

கடந்த வருடம் நடைபெற்ற சமாதான ஊர்வலத்தில் பத்து லட்சம் பேர், கலந்துகொண்டனர்.

ஜப்பானின் மூலை முடுக்குகளிலிருந்தும் இவ்வாண்டு இன்னும் அதிக எண்ணிக்கையில் திரளுவர்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகட்கும் இந்த யாத்திரையில் பங்கு கொள்ளுமாறு அழைப்புக்கள் விடப்பட்டுள்ளன.

ஆகஸ்டு ஐந்தாம் தேதியன்று நகர மக்களின் உணர்வு பொங்கும் வரவேற்பிற்கிடையில் 'யாத்திரை' கோஷ்டிகள் ஹிரோஷிமா வந்து சேரும்.

ஸ்தல மகாநாடுகள்

இத்துடன் இணைக்கப்பட்ட முறையில், ஒவ்வொரு நகரத்திலும், சிற்றூரிலும்கூட அணு, ஜலவாயு குண்டுகளுக்கெதிரான ஸ்தல மாநாடுகள் நடைபெறும்.

இவைகளில் கலந்துகொள்ளுவதின் மூலம் ஜப்பானிய மக்கள் இப் பிரச்சினையில் எவ்வளவு உறுதியுடன் நிற்கின்றனர் என்பது தெரியவரும்.

அந்த நாள்!

ஆகஸ்டு ஆறும் தேதி காலை 8-15 மணி. நகரத்தின் பெரும் பகுதியைப் படுநாசப் படுத்திய முதல் அணுகுண்டு போடப்பட்ட அந்த நாளை நினைவு படுத்தும்! தேசத்தின் நாலாதிசைகளிலிருந்தும் வந்திருக்கும் லட்சக் கணக்கான மக்கள் "சமாதான சதுக்கத்"தைச் சூழ்ந்து கொள்ளுவர்.

இவ்விழா, ஹிரோஷிமா நகர மேயர் தலைமையில் நடைபெறும்.

எல்லாப் பக்கங்களிலும், நகரத்தின் அழிந்த பகுதிகள் நினைவுச்சின்னங்களாகக் காட்சியளிக்கின்றன.

உலக சமாதானத்திற்காக சபமேற்க அவைகள் திடநம்பிக்கையை அளிக்கின்றன.

வாழ்க உலக சமாதானம்! "ஞாபகார்த்த" வளைவிற்கு அருகில், யுத்தத்தினின்று விடுதலை பெற்ற மனித சமூகத்தின் அடையாளச் சின்னம்போல் இளம் பெண்ணொருத்தியின் சிலையும் நிற்கிறது.

சமாதானப் பாலம்

ஹிரோஷிமாவின் ஏழு நதிகளில், ஒன்றில்கட்டப்பட்டுள்ள மிகப் பெரிய சமாதானப் பாலமும் அங்கேதான் உள்ளது.

அணு, ஜலவாயு குண்டுகளைத் தடை செய்ய வேண்டும் என்ற கொள்கைக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட நகர மக்களின் உணர்ச்சியை, இந்தச் சூழ்நிலையில் நீங்கள் புரிந்துகொள்ள முடியும். அணு, ஜலவாயு குண்டுகளை அறவே நிறுத்தி விடுவதென்ற உன்னதப் பணிக்காக சபதமேற்றுள்ளனர் என்பதையும் உணர முடியும்.

ஜப்பானிலிருந்தும், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகளாக ஆயிரக்கணக்கில் இம்மகாநாட்டில் பங்கு கொள்வர்.

விஜயம் செய்பவர்கள், அணுகுண்டு பொருட்காட்சிசாலை, ஆஸ்பத்திரிகள், அதில் சிகிச்சை பெறுபவர்கள், ஆகஸ்டு 6-ந் தேதி மாலை நடைபெறும் புத்த மதச் சடங்கு, முதலியவைகளைக் காணவும் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாகசாகி, காமகுரா டோக்கியோ!

ஆகஸ்டு 9-ந் தேதி இரண்டாவது அணுகுண்டு வீசப்பட்ட தின ஆண்டு நிறைவுநாள், நாகசாகி செல்லவும். அங்குள்ள நினைவுச் சின்னங்களைக் காணவும் முடியும்.

இம் மகாநாட்டிற்குப் பின்னர் ஜப்பானிய மக்களின் கலாசார வாழ்வை உணரவும், சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்றுள்ள கியோட்டோ, நாரா முதலிய இடங்களுக்குச் செல்லவும் முடியும்.

கடற்கரை விழா

இம் மகாநாட்டின் ஒரு பகுதியாகவே, காமகுராவில் கடற்கரை திருவிழாவும், யுத்தத்தில் ஜப்பான் சரணாகதி அடைந்த ஆகஸ்டு பதினைந்தாம் தேதி பிரம்மாண்டமான அணிவகுப்பு ஒன்றும் நடைபெறும்.

பம்பாய் முதலமைச்சரே! ராஜினாமா செய்க!

மகாராஷ்டிர சமிதியின் வேண்டுகோள்

பம்பாய், ஜூலை 3—

மகாராஷ்டிர சமிதியின் மத்திய பார்லிமெண்டரி போர்டு, ஸ்தல ஸ்தாபன உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுப்பதென இன்றையக் கூட்டத்தில் முடிவு செய்தது.

பம்பாய் முதலமைச்சர் எல்லைப் பிரச்சினையில் தீர்வு காண முடியாததால், ராஜினாமா செய்யவேண்டும் என்று ஸ்தல ஸ்தாபனங்கள் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று அந்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

மத்திய பார்லிமெண்டரி போர்டின் கூட்டம் கடந்த 3 தினங்களாக நடைபெற்றது.

ஜூலை 11-ம் தேதி எல்லை தினமாகக் கொண்டாடுவது எனவும், மகாராஷ்டிரம் முழுவதும் அன்று ஊர்வலம், பொதுக் கூட்டங்கள் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

கம்யூனிஸ்ட் எம். பி., எஸ். ஏ. டாங்கே கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

காமராஜர் போலீஸின் புது வேலை!

காரைக்குடி, ஜூலை 4—

இராமநாதபுரம் ஜில்லாவில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப்பற்றிய தகவலை, குறிப்பாக முன்பு சிறைசென்றவர்கள் பற்றிய தகவலை கிராமம் கிராமமாக சி. ஐ. டி.யினர் சென்று விசாரித்து வருகிறார்கள் என்று தெரிகிறது.

இந்திய-செக்நாடு கலாசார உடன்பாடு

புதுடெல்லி, ஜூலை 3—

இந்திய, செக்கோஸ்லோவேகிய நாடுகளுக்கு இடையில் ஒரு கலாசார உடன்பாடு இன்று கையெழுத்தாகிறது. இதன் பிரகாரம் விஞ்ஞானிகள், கல்வித்துறை நிபுணர் கலாசார குழுக்கள் பரஸ்பரம் பரிமாற்றம் செய்துகொள்ளப்படும். புத்தகங்கள், திரைப்படங்கள் இரு நாடுகளுக்குமிடையில் பரிமாற்றமாகும்.

காங்கிரஸ் ஆட்சியில் ஜனநாயகம் படும்பாடு

ஆர்ப்பாட்டம் செய்ததற்கு 21 மாத கடுங்காவல்

வாரணசி, ஜூலை 2—

அண்மையில் உ. பி. முழுதும் நடைபெற்ற உணவுக் கிளர்ச்சியை ஒட்டி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கோர்ட் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக சந்திரஜித் யாதவ் எம். எல். ஏ. (கம்யூனிஸ்ட்) உள்பட 26 கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்களுக்கு தலா 21 மாத கடுங்காவல் தண்டனை விதித்து அஸம்கார் ஜில்லாவிலுள்ள ஸதார் தாசில் மாஜிஸ்ட்ரேட் ஹரிசுந்தரபிரஸாத் சதுர்வேதி செல்வராவ் தீர்ப்பளித்தார்.

தேஜ்பகதூர் சிங் எம்.எல்.ஏ. உள்பட ஏழு கம்யூனிஸ்டுகள் விடுதலை செய்யப்பட்டனர் எனவும் ஒருவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதெனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

கூலி உயர்வு, நூல் விலை குறைப்பை வற்புறுத்தி நெசவாளர் ஆர்ப்பாட்டம்

குடியாத்தத்தில் பெரும் ஊர்வலம் நடந்தது

குடியாத்தம், ஜூலை 1—

தற்போது கொடுக்கப்படும் கூலி மிகவும் குறைவாக இருப்பதால் அதை உயர்த்த வேண்டும் என்றும், நூல் விலையைக் குறைக்கவேண்டும் என்றும் கோரி குடியாத்தம் நெசவுத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். 30-6-59 முதல் நெசவுத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகின்றனர். 1000 நெசவுத் தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தினர். மாலை 3 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் 7 மணிவரையில் நகரின் பகுதிகளுக்கும் சென்றது.

குடியாத்தம் தாலூகா கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத் தலைவர் கே. சி. மார்க்கபந்து, பொதுக் காரியதரிசி வி. கே. அண்ணாமலை ஆகியோர் ஊர்வலத்தை முன்னின்று நடத்தினர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட நெசவுத் தொழிலாளர்கள் பின்வரும் கோஷங்களை எழுப்பினர்.

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கைத்தறித் துணிகளைச் சர்க்கார் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்யவேண்டும்; கூட்டுறவு சொஸைடிகளில் புதிய உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

குமரன் கூட்டுறவு சங்கத்தை திறக்கவேண்டும்

மூடியிருக்கும் குமரன் கூட்டுறவு நெசவாளர் சங்கத்தைத் திறந்து நடத்த அரசாங்கம் உத்தரவிடவேண்டுமென்றும் ஜில்லா கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் நியாய விலைக் கடைகளைத் திறக்கவேண்டுமென்றும் ஹார்விமில்லை உடனே திறந்து நடத்த வேண்டுமென்றும் நெசவுத் தொழிலாளர்கள் வற்புறுத்தினர்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

மருத்துவ விடுதியில் மின்சார வசதியில்லை!

ஐயா,

வடாற்காடு ஜில்லாவிலுள்ள திருப்பத்தூர் டவுன் மருத்துவ விடுதியில் (ஆஸ்பத்திரியில்) உள்ள ஓலைக் கொட்டகையில் 30 படுக்கைகள் உள்ளன. ஆனால் அங்கு மின்சார வசதியில்லாததால் வியாதியஸ்தர்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. அங்குள்ள டாக்டர் பலதடவை அதிகாரிகளுக்கு இவ்விஷயமாக அறிவித்தும் அதிகாரிகள் கவனிக்கவில்லை. இதை உடனே சர்க்காரும், அதிகாரிகளும் கவனித்து மின்சார விளக்குகள் அமைப்பதற்கு ஏற்பாடுசெய்ய வேண்டும்.

பி. கே. சத்தார்கான்
திருப்பத்தூர்.

●

நேரு சிந்திப்பாரா?

ஐயா,

நேருவின் அன்பான கவனத்திற்கும் அவசியமான நடவடிக்கைக்கும் பின்வரும் விஷயங்களைச் சமர்ப்பிக்கிறேன்.

தேசப் பிதாவான காந்திஜி தமது கனவின்படி இந்தியாவைச் சிருஷ்டிக்க ஒவ்வொரு கண்ணிலிருந்தும் கண்ணீரைத் துடைக்க விரும்புவதாகக் கூறினர். தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மத்ய வகுப்பார் இவர்களின் கண்கள் மட்டுமே கண்ணீரைச் சிந்தவில்லையா? கேரள சர்க்கார் பதவிக்கு வந்தது முதல் பல சீர்திருத்தங்களை நிறைவேற்றி அமலுக்குக் கொண்டுவந்து அவர்கள் கண்ணீரை கேரள கம்யூனிஸ்ட் சர்க்கார் துடைக்கவில்லையா? இந்தக் கிளர்ச்சி ஏன்? மத்தியில் அதிகாரத்திலிருக்கும் கட்சி(காங்கிரஸ்) கேரளத்தை அடியோடு இழந்துவிட்டது. இதனால் விளைந்த பொருமையாலும் அதோடு கிலியாலுமே கேரள நிகழ்ச்சி தோன்றியிருக்கிறது. உண்மைதான், கேரளத்தைக் காங்கிரஸ் இழந்துவிட்டதென்பது.

கேரளத்தில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்செய்தது சம்பந்தமாகவும் அராஜகம் சம்பந்தமாகவும் தாங்கள் பின்வரும் விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டும்.

1. பிரிட்டிஷ்சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைவிட அதிகத் தடவை காங்கிரஸ் சர்க்கார்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளன.

2. ஆமதாபாத்தில் நடந்த போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் படுகொலையே ஆகும்.

3. விசாரணை நடத்தவேண்டுமென்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

4. அராஜகம் பற்றியும் அரசியல் சட்டத்தின் 31-வது ஷரத்து பங்கமானது பற்றியும் 16-9-58ல் அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் நீதிபதி ஜெகதீச சஹாயின் எச்சரிக்கைக்கு உ. பி. காங்கிரஸ் சர்க்கார் செவிசாய்க்கவில்லை.

உமது கட்சியினர் உங்களைத் தடுக்கின்றனர். நீங்கள் உண்மையில் ஜாக்கிரதையாக நடக்காவிட்டால், 1781ல் பிரிட்டிஷ் மன்னர் என்ன கூறவேண்டுமென்று பாக்ஸ் எதிர்பார்த்தாரோ அதேவிதம் நீங்களும் கூறவேண்டிய அவசியம் ஏற்படும்.

தாம் ஏமாற்றப்பட்டதாகவும் பொய்யும் தப்பபிப்ராயமும் தம் மீது திணிக்கப்பட்டதாகவும், தம் தவறிவிட்டதை உணர்வதாகவும் அதன் விளைவாக தாமும் மக்களும் அதிக கஷ்டங்களுக்கு ஆளாகிவிட்டதாகவும், ஆகவே பார்லிமெண்டு இந்த அனர்த்தங்களை நீக்கி, நாட்டில் அமைதி, சுகம், பந்தோபஸ்து இவற்றை ஏற்படுத்த துரிதமான வழிமுறைகளைக் காண வேண்டுமென்று 1781ல் பிரிட்டிஷ் மன்னர் கூறியதுபோல் நீங்கள் கூறவேண்டிய அவசியம் ஏற்படும்.

ஆர். ஆர். சீனிகந்தேஸ்வரம்,
திருவனந்தபுரம்.

●

சர்க்கார் உடனே கவனிப்பார்களா?

ஐயா,

எங்கள் தாலூகாவில் இருக்கும் ஹரிஜனங்களுக்குக் குடியிருக்க வீடு இல்லாத நிலையில் பாழடைந்த குடிசைகளிலும், சத்திரம், சாவடி, சந்தைக்கடை, சாக்கடை வழி ஆகிய இடங்களில் வசிக்கும் காட்சி மிகவும் பரிதாபமாக இருக்கிறது

ஆகவே சர்க்கார் ஆரம்பித்துள்ள வீடு கட்டும் திட்டத்தில் ஒரு பகுதியாக பல்லடம் தாலூகாவை அடுத்துள்ள கிராமத்தையும் சேர்த்து, அங்குள்ள ஏழை மக்களுக்கு வீடுகட்டிக்கொடுத்து அவர்களின் பிழைப்பிற்காக மாடு, கலை, உரம், பண உதவி முதலியவையும் கொடுத்து அவர்கள் வாழ வழி வகுக்குமா?

பி. கே. வீரான்குட்டி,
பல்லடம்.

●

காங்கிரசின் விபரீதப் போக்கு!

ஐயா,

பம்பாய் மாகாண மொழி வழிக் கிளர்ச்சியின்போது பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் மந்திரிசபைக்கு மக்களுடைய ஆதரவு உண்டு என்று சொன்னார்கள். ஆனால் அவர் கூட்டம் கூட்டியும் அக்கூட்டத்தை எல்லாப் பகுதி மக்களும் பகிஷ்கரித்தனர். அப்படியிருந்தும் அன்று காங்கிரஸ் மந்திரி சபையை ராஜினாமா செய்யும்படியோ, மறு தேர்தல் நடத்த வேண்டுமென்றோ காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு கூடி சொல்லவில்லை.

ஆனால் கேரளத்திலே ஒரு மாற்றுக்கட்சி-கம்யூனிஸ்ட்கட்சி ஆள்கிறதே என்பதற்காகக் காங்கிரஸ் தலைவர்கள், பிற்போக்காளர்களுடனும் கூட்டு சேர்ந்து கொண்டு, கேரள சர்க்கார் ராஜினாமா செய்யவேண்டுமென்றும், மறுதேர்தல் நடத்த வேண்டுமென்றும் கூச்சல் போடுகிறார்கள். ஆனால் இன்று கேரளத்தில் கம்யூனிஸ்ட் மந்திரிகள் யார் எங்கு பொதுக்கூட்டத்தில் பேசினாலும் பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டு வருகின்றனர். இந்நிலையில் கேரள சர்க்காரை 'ராஜினாமா செய்' என்று கேட்பதற்குக் காங்கிரசுக்கு என்ன யோக்யதை இருக்கிறது? இவர்களுக்கு ஒரு ஜனநாயகம்? மற்றவர்களுக்கு ஒரு ஜனநாயகமா?

வி. பழனியப்பன்,
வீரப்பன்சத்திரம்.

காவேரி நகரில் மாதர் மாநாடு

கேரள ஆட்சிக்கு ஆதரவு

காவேரி நகர், ஜூன் 27—

காவேரி நகர் மாதர் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா 26-6-59 அன்று காவேரி நகரில் மிகவும சிறப்பான முறையில் நடைபெற்றது.

மாதர் சங்கத்தின் பேரவைக் கூட்டம் பிற்பகல் 4 மணியளவில் தொழிற்சங்க கட்டிடத்தில் திருமதி பி. பாப்பா உமாநாத் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வணக்கப்பாடல் பி. சிவகாமசுந்தரி பாடிய பின், தலைவர் முன்னுரையில், மாதர் சங்க அங்கத்தினர்களின் கடமைபற்றியும், மாதர்களின் குடும்ப வாழ்க்கையை செம்மைபட நடத்த மாதர் சங்கம் போதிக்கின்றது என்பது பற்றியும் மாதர்களின் முன்னுள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பவைகளைப்பற்றியும், காவேரி நகர் மாதர் சங்க வளர்ச்சிபற்றியும், மாதர்களின் கலாச்சார, பொருளாதார முன்னேற்றத்தை வளர்ப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றியும், இச்சங்கத்தைத் தாலூகா மாதர் சங்கமாக விரிவுபடுத்தவேண்டிய அவசியம்பற்றியும் தெளிவுபட சொற்பொழிவாற்றினர்.

அதன்பின், காரியதரிசி எம். முத்தம்மாள் ஆண்டு அறிக்கை வாசித்தார். கடந்த ஆண்டு வரவு செலவு கணக்கை பேரவை முன் எஸ். சரோஜா சமர்ப்பித்தார்.

புதிய ஆண்டு நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்களை பேரவை ஏகமனதாக தேர்ந்தெடுத்தது. திருமதி ஆர். முத்தம்மாளை தலைவராகவும், எஸ். சரோஜாவை உப-தலைவராகவும், எம. முத்தம்மாளைக் காரியதரிசியாகவும், திருமதி கே. ராஜேஸ்வரியை உப காரியதரிசியாகவும் தேர்ந்தெடுத்தனர்.

நிர்வாகக் குழு அங்கத்தினர்களாக கீழ்க்கண்டவர்களை பேரவை ஏகமனதாக தேர்ந்தெடுத்தது. பி. தனம், ஆர். பி விஜயலட்சுமி பி. சுப்புலட்சுமி, பி. கல்யாணி, கே. வீரம்மாள், கே. தேவகிருபை. எம். அம்மாபிள்ளை பி. பந்தானம், கே. மாசாணி, டி. பீபிஜான்.

பேரவைக் கூட்டத்தில் 80க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் கலந்துகொண்டனர். காவேரி நகர் மாதர் சங்கத்தில் மொத்தம் 121 அங்கத்தினர்கள் உள்ளனர்.

பேரவைக் கூட்டம் மாலை 6 மணியளவில் இனிது முடிவுற்றது.

பொதுக்கூட்டம்

பேரவைக் கூட்டத்தையொட்டி மில் காலனியில் பி பாப்பா உமாநாத் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

வணக்கப்பாடல் பி. கல்யாணி பாடியதும் தலைவர் முன்னுரையில், "கேரள சர்க்கார் பெண் குலத்திற்கு செய்யும் பல நன்மைகளைக் குறிப்பிட்டுப் பாராட்டினர். ஹார்வி மில் தொழிலாளர்களின் போராட்டம் பற்றியும் தொழிற்சங்க தலைவர்களான கே. டி. கே. தங்கமணி, பாலசுப்பிரமணியம் உண்ணாவிரதத்தின் நோக்கம் வெற்றியடைய வேண்டுமென்றும் கூறினர்.

பாப்பா உமாநாத்

மாதர் சங்கக் கொடியை எஸ் பாப்பா அவர்கள் ஏற்றுவித்துப் பேசினர். அடுத்து திருச்சி எஸ். ஜானகி அவர்கள் வாழ்த்துக் கூறி பேசினர்.

அதன் பின் திருமதி வள்ளியம்மை அவர்கள் "விவசாயப பெண்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணய சட்டத்தை சர்க்கார் கொண்டுவர வேண்டும்" என்ற தீர்மானத்தை பிரேரேபித்துப் பேசினர்கள் திருமதி சாவித்திரி அவர்கள் அணு ஆயுத சோதனைகளை தடை செய்யக் கோரும் தீர்மானத்தை பிரேரேபித்து பேசினர்கள். திருமதி எம். முத்தம்மாள் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களை பிரேரேபித்தார்கள்.

தீர்மானங்கள்

கேரள சர்க்காரை வாழ்த்தியும், கேரள சர்க்காருக்கு எதிராக நடைபெறும் கலகத்தைக் கண்டித்தும்,

கடந்த 40 தினங்களாக, நியாயமான உரிமைகளுக்காக, போராடிவரும் 22 ஆயிரம் ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு இக்கூட்டம் பரிபூரண ஆதரவளித்தும், ஹார்வி வெள்ளை நிர்வாகத்தின் ஆணவத்துக்கு உடந்தையாக இருக்கும் சென்னை சர்க்காரின் அலட்சிய போக்கை எதிர்த்தும் தொழிலாளர்களின் மாபெரும் தலைவர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. பாலசுப்ரமணியம் உண்ணாவிரதத்தை குறிப்பிட்டு உடனடியாக சென்னை சர்க்கார் தலையிட்டு மில்லைத் திறக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியும்,

தினமணி எக்ஸ்பிரஸ் தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரித்தும் பிரேரேபிக்கப்பட்ட தீர்மானங்கள் நிறைவேறின.

தொழிலாளர்கள் குடியிருக்கும் காலனியை சுத்தபபடுத்தவும், பெணகளுக்கு வைத்திய வசதி செய்யக் கோரியும் மில் மானேஜ்மெண்டை கேட்டு கொள்ளும் தீர்மானங்களையும் மற்றும் சில தீர்மானங்களையும், தலைவர் பிரேரேபணை செய்தார். எல்லா தீர்மானங்களும் கூட்டத்தின் நீண்ட கரகோஷத்திற்கிடையில் நிறைவேற்றப்பட்டன.

சிவகாமசுந்தரி பேச்சு

பின்னர் பி. சிவகாமசுந்தரி எம். ஏ. அவர்கள் "பண்டை காலத்தில் பெண்களின் முன்னேற்ற நிலை, வீரத்தின் சாயல், சமூகத்தில் பெண்களின் பங்கு எவ்வாறு இருந்தது என்பதை எடுத்துக்காட்டும் தமிழ் இலக்கியங்களைச் சான்று காட்டி கூறினர். "இன்று பெண்களின் உணர்வு, தான் ஆண்களுக்கு கட்டுப்பட்டவர்கள் என்ற நிலையில் உள்ளது. இந்நிலைக்குக் காரணம் பொருளாதார முன்னேற்றம் பெண்குலத்திற்கு இல்லை என்ற நிலை. இதைப் போக்க மாதர் இயக்கம் வளர வேண்டியதின் அவசியம் பற்றி விளக்கினர்.

மாதர் முன்னேற்றத்திற்குக் குறுக்கே வரும் பிற்போக்கு கூட்டத்தை, நம் இயக்கத்தால் வீழ்த்த முடியும் என்றார். அகிலத்தை நாசப்படுத்த பயமுறுத்தி அலையும் யுத்த வெறியர்களை முன் நின்று எதிர்த்து வெற்றி கண்டு மனித குலத்தை நம் குலத்தால் பேண முடியும்" என்று உணர்ச்சியுடன் பேசினர்.

மாதர் சங்க ஆண்டுவிழாவை வாழ்த்தி தூத்துக்குடி மாதர் சங்கம், கோவை மாதர் சங்கம், திருச்சி மாதர் சங்கம், பாண்டிச்சேரி மாதர் சங்கம், அகில இந்திய மாதர் சம்மேளனம், முதலிய ஸ்தாபனங்கள் வாழ்த்து செய்திகள் அனுப்பியிருந்தன.

பின் தலைவர் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது

(ந. நி.)

எதிர்க்கட்சி எம். எல். ஏ.க்கள் ராஜினாமாச் செய்யலாம்

பள்ளி, பஸ் மறியல்களை காங்கிரஸ் ஆதரிக்கவில்லையாம்

போராட்டம் தீவிரம் என்கிறார் சாக்கோ

எர்ணாகுளம், ஜூலை 2—

சர்க்காரின் அலுவல்களை ஸ்தம்பிக்கவைக்கும் நிலைமையில அகிம்சாபூர்வமான ஒரு நேரடி நடவடிக்கையாக சட்டசபையிலுள்ள எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்ய நேரிடலாம் என்று கேரள சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பி. டி. சாக்கோ இங்கு பத்திரிகை நிருபர்களிடம் கூறியதாக 'மாத்ரு பூமி' செய்தி வெளியிட்டிருக்கிறது.

பஸ்களை மறியல் செய்வதையோ, பள்ளிக்கூடங்களை மறியல் செய்வதையோ காங்கிரஸ ஆதரிப்பதில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினர். இப்படிப்பட்ட வேலைகளில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்வதைத் தான் ஆதரிக்கவில்லை என்றார்.

சர்க்காரை எதிர்த்து நடத்தும் பலரங்கப் போராட்டத்தில் ஒரு அம்சமான இந்த மறியல் போராட்டத்தை விட்டுவிட்டாலும் வேறு புதிய போராட்டங்கள் பல இருப்பதாக அவர் கூறினர். இத்தகைய புதிய போராட்டத் திட்டங்கள் என்ன என்பதை வெளியிட அவர் மறுத்தார். சர்க்காருடன் எல்லாத் துறைகளிலும் ஒத்துழையாமை அனுஷ்டிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

கேரளத்தில் மத்திய சர்க்கார் தலையிடவேண்டும். எனவே ராஜ்யம் முற்றிலும் கிளர்ச்சி ஏற்படுத்திக் குழப்பத்தை வளர்க்க வேண்டும் என்று கருதுகிறீர்களா? என்று கேள்வி எழுந்தது.

எப்படியும் மத்திய சர்க்கார் தலையிட்டே தீரும். இது தவிர்க்க முடியாதது. ஆனால் தலையீடு அவசியம் என்பதை மக்கள் ஏற்க வேண்டும். இதற்கான சூழ்நிலையைப் போராட்டம் மூலம நாங்கள் ஏற்படுத்துவோம். போராட்டம் தீவிரப்படும் என்றார் சாக்கோ.

கம்யூனிஸ்ட் சர்க்காருக்கு செல்வாக்கு குறைந்துவிட்டதாக கூறுவது முழுப்பொய்

முன்னைவிட அதிகரித்திருக்கிறது

காங்கிரஸ் மேலிடத்தின் குருட்டுப் பாய்ச்சலுக்கு பூபேஷ்குப்தா பதில்

சென்னை, ஜூலை 2—

கேரளக் கம்யூனிஸ்ட் சர்க்காரின் செல்வாக்கு, காங்கிரஸ் மேலிடம் சொல்லுவதுபோல் குறையவில்லை; அதற்கு மாறாக முன்னைவிட அதிகமாகப் பெருகியிருக்கிறது என்று ராஜ்யசபா கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பூபேஷ்குப்தா இங்கு, கோகலே ஹாலில் தொழிற் சங்கங்களின் சார்பாக நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் ஹார்வி மில் தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரித்துப் பேசியபின் கேரள நிலைமையைப்பற்றி பின் வருமாறு பேசினர்.

மறுதேர்தல் மாய்மாலம்

"இந்தியாவிலுள்ள காங்கிரஸ் ராஜ்யங்களில், காங்கிரஸ் ஆட்சியாளர்களின் யதேச்சாதிகாரத்துக்கு எதிராக சர்வ கட்சிகளும் சேர்ந்து எத்தனையோ போராட்டங்கள் நடத்தியிருக்கின்றன. வெள்ளம்போல் ஜனங்கள் திரண்டு மிகப்பெரிய கொந்தளிப்புகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும்கூட எந்த எதிர்க்கட்சியும் 'மறுதேர்தல் நடத்தவேண்டும்' என்று கேட்கவில்லை. கேரளத்தில் ஜன கொந்தளிப்பு இருப்பதாகவும், ஆகவே மறுதேர்தல் வைத்து ஆளும் கட்சி மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டுமென்றும் சொல்லக்கூடிய காங்கிரஸ் மேலிடத்து மேதைகள், காங்கிரஸ் ராஜ்யங்களில் கொந்தளிப்புகள் ஏற்பட்டபோது, அங்கும் 'மறுதேர்தல்' வைக்கவேண்டுமென்று என்றைக்காவது சொன்னதுண்டா? அப்படி யோசித்தாவது உண்டா? கிடையாதே.

ஆனால் கேரளத்தில் வகுப்புவாத தீயசக்திகளைத் தூண்டிவிட்டு, அவற்றுடன் சேர்ந்து கொண்டு, பெரிதாகக் கிளர்ச்சி இருப்பதுபோல் சித்தரித்து கேரள மந்திரி சபையை அகற்ற மத்திய சர்க்காரின் தலையீட்டுக்கு ஏற்பாடு செய்யவே காங்கிரஸ் மேலிடம் முனைந்தது. (வெட்கம், வெட்கம்)

நீங்கள் எத்தனை சதம்?

"கேரள கம்யூனிஸ்ட் சர்க்கார் 35 சதமான ஓட்டுகளைத்தான் பெற்றிருக்கிறதென்றும், அதை ஆதரித்தவர்களும் இப்போது எதிர்க்கிறார்களென்றும் அதனால் ராஜினாமா செய்து மறுதேர்தல் நடத்த வேண்டுமென்றும் காங்கிரஸ் மேலிடம் தீர்மானம் நிறைவேற்றியது.

அதையே திருப்பிக் கேட்கிறேன். மேற்கு வங்கத்தில் பி.சி.ராய் சர்க்கார் 38 சத ஓட்டுகளால்தானே ஆட்சிக்கு வந்தது! அதை சர்வகட்சிகளும் எதிர்க்கின்றனவே! அந்த ஆட்சிக்கு எதிராக எத்தனையோ தடவை ஜனசமுத்திரங்கள் பொங்கினவே! அப்பொழுதெல்லாம் இந்தக் காங்கிரஸ் மேலிட மோகிகளிடமோ மறுதேர்தல்பற்றி பேச்சாவது பேசியதுண்டா? மூச்சாவது விட்டதுண்டா? பேச்சுமில்லை, மூச்சுமில்லை ஏன்?

திராணி இருக்கிறது

ஏனென்றால், கேரள கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் சர்க்காருக்கும்தான் நிலச்சட்டம் கொண்டுவரக் கூடிய தெம்பும் திராணியும் இருக்கிறது. ஆசிரியர்களும் கல்வி நிபுணர்களும் மெச்சக்கூடிய கல்விச் சட்டத்தையும் தொழிலாளர்களின் சட்டபூர்வமான உரிமைப் போராட்டங்களில்போலீஸ்தலையிடக் கூடாது என்றும் சட்டத்தையும் செய்வதற்கு தெம்பும் உறுதியும் இருக்கிறது. இதுபோன்ற சட்டங்களை காங்கிரஸ் ராஜ்ய சர்க்கார் ஏதாவது கொண்டுவந்திருக்கிறார்களா? மத்திய சர்க்காராவது கொண்டுவந்தது உண்டா? கிடையாது.

செல்வாக்கு யாருக்கு?

ஜனத்தொகையில் பெரும்பாலாரான விவசாயிகளுக்கு நன்மையளிக்கும் சட்டங்களையும், தொழிலாளர்களுக்கும் நடுத்தரவர்க்கத்தினருக்கும் நன்மையளிக்கும் சட்டங்களையும் நிறைவேற்றியிருப்பதால், கேரள சர்க்காரின் செல்வாக்கு பொதுத் தேர்தல் சமயத்தில் இருந்ததைவிட இன்று அதிகரித்திருக்கிறது. தேவிகுளம் உப தேர்தலிலும் ஜனங்கள் யார் பக்கமிருக்கிறார்கள் என்பது உலகறியச் செய்துவிட்டது.

ஆனால், அதே சமயத்தில் பம்பாயிலும் வங்காளத்திலும் காங்கிரஸ் சர்க்காருக்கு ஆரம்பத்தில் இருந்த ஆதரவைவிட, இன்று பெரிய அளவில் குறைந்துவிட்டது. ஆகவே மறுதேர்தல் வைக்க வேண்டிய ராஜ்யங்கள் அவைதான்.

எனவே காங்கிரஸ் மேலிடம் கண்ணை விழித்து அந்த ராஜ்யங்களில் போய் 'மறு தேர்தல்' உபதேசம் செய்யட்டும். (கரகோஷம்)

துப்பாக்கிச் சூடு

"துப்பாக்கிப் பிரயோகத்தை விசாரணை நடத்த வேண்டுமென்கிறது காங்கிரஸ் மேலிடம். பஞ்சாபிலும் பம்பாயிலும் மேற்கு வங்கத்திலும் எத்தனை தடவை சுட்டார்கள்! பாரபட்சமற்ற விசாரணை நடத்தினார்களா? மேற்குவங்கத்தில் ஒருதடவை விசாரணை வைக்கப்பட்டது ஆனால் அந்த அறிக்கையை வெளியிடுங்கள் என்று எதிர்க்கட்சிகள் கோரியபோது, 'வெளியிட முடியாது' என்று முதலமைச்சர் கூறினார். இதைப்பற்றி நேரு முதலிய தலைவர்கள் ஒரு வார்த்தையாவது பேசினார்களா? இல்லையே! ஆனால் சுமுக நிலை ஏற்பட்டபின், வசாரணை நடத்துவதாக இ. எம். எஸ். சொல்லியிருக்கிறார்.

இன்று கேரளத்தில் மொத்தம் 2000 பேர்தான் கோர்ட்டில் நிறுத்தப்பட்டு, ஒரு வாரம் 2 வாரம் என தண்டனை கொடுக்கப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மீதிப் பேர்களை மறியல் இடத்தை விட்டு அகற்றப்பட்டிருக்கிறது. பாதுகாப்புக் கைதியாக ஒருவரைக் கூட பிடிக்கவில்லை.

ஆனால், பஞ்சாப் போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பாதுகாப்புக் கைதிகளாக சிறையில் தள்ளினர்கள். மேற்கு வங்க சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜோதிபாசுவை பாதுகாப்புக் கைதியாகக் கைதுசெய்தார்கள். பம்பாயில் போராட்டம் துவங்குவதற்கு முன்னேயே டாங்கேயை பாதுகாப்பு சிறையில் அடைத்தார்கள்.

ராஜாஜி கூறியதுபோல்

"காங்கிரஸ் மேனட்டுக்குச் 'சூல்' என்று தைக்குமாறு ராஜாஜி ஒரு ஆலோசனை கூறினர். அதாவது, தேர்தலில் காங்கிரஸ் தவிர வேறு கட்சி மெஜாரிட்டியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டால், ஜனாதிபதியால் அந்த மந்திரிசபை டிஸ்மிஸ் செய்யப்படும் என்று அரசியல் சட்டத்தைத் திருத்தம் செய்து கொள்ளுவதுதானே!' என்று கேட்டார். ஜனநாயகத்தின் குத்தகைக்காரர்களான காங்கிரஸ் தலைவர்களுக்கு ராஜாஜியின் இந்த வார்த்தைகளை ஞாபகப்படுத்துகிறேன்

ராஜிஞமா இல்லை

"ஆகவே கேரள சர்க்காரைப் பொறுத்த வரையில் ராஜிநாமா செய்யப் போவதில்லை. சட்டசபையில் மெஜாரிட்டி இருக்கிற வரையில், ஜனபலம் அதற்கு ஆதரவாக இருக்கிற வரையில் ராஜிநாமா என்ற பேச்சுக்கே இடமில்லை (கரகோஷம்)

உடைமை வர்க்கத்தின்சவாலை, உழைப்பாளி வர்க்கம் ஏற்கத் தயார் என்றும், ஏற்று முறியடிக்கும் என்றும் உறுதியாகச் சொல்லுகிறேன்! என்று பலத்த கரகோஷத்திற்கிடையே பேசினர்.

பூபேஷின் ஆங்கிலச் சொற்பொழிவை தோழர் மூகவை ராஜமாணிக்கம் தமிழில் மொழி பெயர்த்தார்.

நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவதில் தாராளம் தண்ணீர்பட்ட பாடாயிருக்குமாம்

நிலப்பிரபுக்களுக்கு மாணிக்கவேலர் அபயம்

தஞ்சை, ஜூலை 1—

"மிராசுதார்களுக்கு நான் எப்பொழுதுமே வாக்குறுதி கொடுத்துவந்திருக்கிறேன். இதுவரை கொடுத்த வாக்குறுதிப் படியேதான் இனி மேலும் நடக்கப் போகிறேன்" என்று சென்னை ரெவினியூ அமைச்சர் திரு. எம். ஏ. மாணிக்கவேலர் தஞ்சை ஜில்லா அம்மையாண்டி என்ற ஊரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசினர்.

தாராளம்! தாராளம்!

அவர் மேலும் விளக்குகையில், "மிராசுதார்கள் வெறுமனே பீதியடையவேண்டிய அவசியமே இல்லை. நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டுகிறபோது, மிக மிகத் தாராளமாகத்தான் நிர்ணயிப்போம். சோஷலிஸ பாணி சமுதாயம் என்று ஆகிவிட்ட பிறகு உச்சவரம்பு கட்டித்தானே ஆகவேண்டும்! கட்டும்போது தாராளம் காட்டுகிறோம். இந்த வருடம் முடிவதற்குள்ளாக உச்ச வரம்பு கட்டப்போகிறோம்" என்று கூறினர்.

சங்கு ஊதி எச்சரித்தனர்

உச்ச வரம்பு கட்டப்போவதாக பல ஆண்டுகளாக மாணிக்கவேலரும் மற்றுமுள்ள காங்கிரஸ் பேச்சாளர்களும் சங்கு ஊதி வைத்ததும். அதனால் உச்ச வரம்பு கட்டுகிறபோது மிச்ச நிலம் எதுவுமே இருக்காதபடி, ஒவ்வொரு மிராசுதார்களும் தத்தம் மச்சான்களுக்கும் கச்சான்களுக்கும், பிறந்த குழந்தைகளுக்கும், பிறக்கப்போகும் குழந்தைகளுக்குமாக பங்கு வைத்து பட்டா பதிந்துகொண்டதும் இதுவும் போதாதென்று சர்க்கார் புறம்போக்கு நிலங்களிலும் பாய்ந்து டிராக்டர் வைத்து உழுது, சவுக்கு தோப்பு வைத்திருப்பதும் நேயர்கள் அறிந்ததே.

மடத்துப்பட்டி விவசாயிகள் சங்கம்

மடத்துப்பட்டி, ஜூலை 2—

சாத்தூர் தாலுகாவைச் சேர்ந்த மடத்துப்பட்டி விவசாயிகள் சங்கத்தின் புது நிர்வாகிகள் வருமாறு: டி. அழகர் ராமானுஜம் தலைவர், வி. துரைராஜ் உப தலைவர், டி. நாராயணசாமி செயலாளர், அ.கிருஷ்ணசாமி துணைச் செயலாளர், பெ. ராமசாமி பொருளாளர்,

---

த. நா. பஞ்சாலைகளில்

8-7-59-ல் நடக்கவிருந்த கண்டன வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

த. நா. தொ. ச. காங்கிரஸ் தலைவர் எம். கல்யாணசுந்தரம் எம். எல். ஏ., செயலாளர் டி. ஆர். கணேசன் அறிக்கை

சென்னை, ஜூலை 4—

22,000 ஹார்வி மில் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை 45 நாள் போராட்டத்தை ஆதரித்து, சர்க்கார் தலையிட்டு, ஹார்வி மில் முதலாளி வைக்கப்பட்டது, ஹார்விமில் தொழில் தகராறை ஒரு நியாயமான முறையில் தீர்த்துவைக்கக் கோரி, தமிழ்நாடு பஞ்சாலைத் தொழிலாளர்கள் 8-7-59-ல் ஒரு நாள் அனுதாப ஹர்த்தால் செய்ய வேண்டுமென்று பத்து தினங்களுக்கு முன் தமிழ்நாடு தொழிற்சங்கக் காங்கிரஸின் சார்பில் ஒரு அறைகூவல் விடுத்திருந்தோம். இந்த அறைகூவலுக்கிணங்க சேலம், கோவை, வட ஆற்காடு, திருச்சி முதலிய ஜில்லாக்களிலுள்ள பஞ்சாலைத் தொழிற் சங்கங்கள் தங்கள் நிர்வாகக் கமிட்டியில் இந்த அறைகூவலை விவாதித்து, 8-7-59ல் ஒரு நாள் ஹர்த்தால் செய்வதென்று முடிவு செய்து, இதன் அடிப்படையில் 8-7-59ல் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட மில்களில் வேலைக்கு வரமாட்டார்கள் என்று மில் முதலாளிக்கும் சென்னை சர்க்காருக்கும், தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸிற்கும் கடிதம் எழுதியிருந்தார்கள். இவ்வாறு தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஹார்வி மில் தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்து எங்கள் அறை கூவலுக்கு இணங்கி 8-7-59ல் ஒரு கண்டன வேலைநிறுத்தம் செய்ய ஒன்று திரண்டு எழுந்ததற்கு எங்கள் நன்றி

ஆனால் இதற்கு இடையில் சென்னை சர்க்கார் ஹார்வி மில் தகராறைத் தீர்க்க 4-7-59-ல் லேபர் கமிஷனர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளது இதன் மூலம் ஒரு நியாயமான முடிவு காண முடியும் என்ற அடிப்படையில், ஹார்வி மில் தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்து 12 நாள் உண்ணாவிரதப் போராட்டம் இருந்துவரும் தோழர்கள் கே. டி. கே. தங்கமணியும், ஏ. பாலசுப்ரமண்யமும் உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்திக் கொண்டுள்ளனர். இந்த சூழ்நிலையில் தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்கள் 8-7-59-ல் ஒருநாள் அனுதாப ஹர்த்தால் செய்வது அவசியமில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. 4-7-59-ல் ஹார்வி மில் நிர்வாகம், தொழிற்சங்கங்கள், சர்க்கார் பிரதிநிதிகள் நடத்தும் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு நியாயமான முடிவு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே 8-7-59-ல் அனுதாப வேலைநிறுத்தத்தை செய்வது அவசியமில்லை என்பதை தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இதன் மூலம் அறிவித்துக்கொள்கிறோம்.

கேரளத்தில் காங்கிரஸ் போக்கு இந்திய ஜனநாயகத்திற்கு ஆபத்து

கேரள சர்க்காருக்கு ஆதரவாக திரண்டெழுக

மோஹன் குமாரமங்கலம் அறைகூவல்

சென்னை, ஜூலை 4—

"கேரள கம்யூனிஸ்ட் சர்க்காரை அகற்றுவதற்காகக் காங்கிரசும், இதர எதிர்க்கட்சிகளும் அங்கு சட்டவிரோதமான, பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டு வருவது, இந்திய ஜனநாயகத்திற்கும், பார்லிமெண்டரி ஆட்சிமுறை சம்பிரதாயத்திற்கும், இந்திய அரசியல் சட்டத்திற்குமே ஆபத்து விளைவிப்பதாகும். ஆகவே இந்திய ஜனநாயகத்தையும், அரசியல் சட்டத்தையும் நிலைநிறுத்துவதற்காகக் கேரளக் கம்யூனிஸ்ட் சர்க்காருக்கு ஆதரவாகத் திரண்டெழுங்கள்", என்று கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் மோஹன்குமாரமங்கலம் நேற்றிரவு சென்னை பி.அண்ட் சி. மில் அருகில் பென்ஷனர் லேன் மைதானத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அறைகூவல் விடுத்தார்.

கூட்டத்திற்குத் தோழர் கே கஜபதி தலைமை வகித்தார். ஹார்விமில் தொழிலாளர்களின் போராட்டத்திற்கும், கேரள சர்க்காருக்கும் ஆதரவு தெரிவிப்பதற்காகக் கூட்டப்பட்ட மேற்படி கூட்டத்தில் தோழர் கஜபதி ஆரம்பத்தில் ஹார்விமில் நிர்வாகத்தின் சுரண்டலையும், 22,000 தொழிலாளிகள் நடத்தி வரும் போராட்டத்தையும், பி. அண்ட் சி. தொழிலாளர் குறைகள் பற்றியும் பேசினர்.

டி. ஆர். கணேசன்

அடுத்து, தமிழ்நாடு தொழிற் சங்கக் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி தோழர் டி. ஆர். கணேசன் ஹார்விமில் போராட்டம் பற்றி விரிவாகப் பேசினர். ஹார்விமில் நிர்வாகம் தன்தோன்றித் தனமாகத் தொழிலாளர் மீது அதிக வேலைப் பளுவை சுமத்த முன்வந்ததைப் பற்றியும், சர்க்கார் நடத்திய முக்கூட்டு மகாநாடுகளின் முடிவுகளுக்கே விரோதமாக ஹார்விமில் வெள்ளை நிர்வாகம் கதவடைப்பு செய்து, 22000 தொழிலாளிகளை நடுத்தெருவில் நிறுத்தியதையும், அம்முதலாளி மீது சென்னை ராஜ்ய காங். சர்க்கார நடவடிக்கை எடுக்க மறுத்து கையாலாகாத் தனமாக இருப்பதை பலமாகக் கண்டித்தும் பேசினர். எக்ஸ்பிரஸ் தொழிலாளிகளின் போராட்டம் பற்றியும் குறிப்பிட்டு, எவ்வாறு சர்க்கார், கோயங்கா மீது நடவடிக்கை எடுக்கத் திராணியில்லாமல் வாளாயிருக்கிறது, என்பதை எடுத்துக் காட்டி கண்டித்தார்.

மோஹன் குமாரமங்கலம்

அடுத்துத் தோழர் மோஹன் குமாரமங்கலம் பேசுகையில், கேரளத்தில் காங்கிரஸ், பி.சோ., முஸ்லீம் லீக், புரட்சி சோஷலிஸ்ட் கட்சி, கத்தோலிக்கர்கள், நாயர் சேவா சங்கத்தினர் ஆகியோர் கேரள சர்க்காருக்கு எதிராக நடத்திவரும் சட்டவிரோதக் கிளர்ச்சியைப் பற்றி விரிவாகப் பேசினர்.

மற்ற ராஜ்யங்களில் அஹிம்சையையும், ஜனநாயகத்தையும் பற்றி உபதேசம் செய்யும் காங்கிரஸ், கேரளத்தில் அவற்றைக் குழி தோண்டிப் புதைக்க முயல்வதையும், எப்படியாவது, கேரள மந்திரி சபையை டிஸ்மிஸ் செய்து, ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவதற்காக முயற்சி செய்வதையும் வன்மையாகக் கண்டித்துப் பேசினர்.

தீர்மானம்

ஹார்வி மில் தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்தும், கதவடைப்பை உடனே ரத்து செய்யும்படி மில் முதலாளியை நிர்ப்பந்திக்கும்படி சென்னை சர்க்காரைக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோவிந்தன் நாயர் ஜனதிபதி சந்திப்பு

புதுடெல்லி, ஜூலை 3—

எம். என். கோவிந்தன் நாயர் கேரள கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் இன்று இந்திய ஜனதிபதி ராஜன் பாபுவையும், உப-ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனையும், உள்நாட்டு மந்திரி பண்டிட் பந்தையும் சந்தித்து கேரள நிலைமையை எடுத்துக் கூறினர்.

ஜனதிபதியிடம் மாலை 5 மணிக்குத் தொடங்கிய அவர் பேச்சு சுமார் அரை மணிநேரம் நீடித்தது.

இன்று காலையில் டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்து எதிர்க்கட்சிக்காரர்கள் சகிக்க முடியாத அளவுக்கு பலாத்கார செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்று கூறியுள்ளார்.

உள்நாட்டமைச்சர் பண்டிட் பந்தைச் சந்தித்து நாட்டின் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு இருப்பதால் கேரள அரசாங்க விஷயத்தில் அக்கறைகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

உள்நாட்டு அமைச்சரிடம் கோவிந்தன் நாயர் பேசிக்கொண்டிருக்கும்போது பிரதம மந்திரியும் அங்கு வந்து சேர்ந்தார்.

கோவிந்தன் நாயர் இன்று திருவனந்தபுரம் திரும்பினர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாவட்ட பொதுக்குழு (கவுன்சில்) கூட்டம்

திருச்சி, ஜூலை 3—

1959 ஜூலை மாதம் 2, 3 தேதிகளில் புதுக்கோட்டை நகரில், டவுன் ஹாலில் திருச்சி மாவட்ட பொதுக்குழு கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 65 பேர்களைக் கொண்ட பொதுக் குழு, மகாநாட்டில் தேர்ந்தெடுத்த பிறகு முதன் முதலில் கூடுகிறது.

2-7-59 வியாழன் முதல் நாள் நிகழ்ச்சி காலை 11 மணிக்கு ஆரம்பமாகியது. தோழர்கள் கே. டி. ராஜு, கந்தசாமி, ரெத்தினம் தலைமை குழுவாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தியாகிகள் வணக்கத்திற்கு பின், நிகழ்ச்சி நிரல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாகாண செயற்குழுவின் சார்பில் தோழர் என். சங்கரையா, காரைக்குடி மாநாட்டு முடிவுகளையும், மதுரை செயற்குழு முடிவையும் விளக்கி $1\frac{1}{2}$ மணி நேரம் சிறந்த முறையிலே பேசினர். வந்திருந்த பொதுக்குழு உறுப்பினர்களுக்கு நல்ல தெளிவாக இந்த சொற்பொழிவு இருந்தது.

பின்னர், மாவட்ட செயலாளர் தோழர் எஸ். ராமசாமி அரசியல் ஸ்தாபன பகுதியை விளக்கி உரை நிகழ்த்தினர். அதையொட்டி சுமார் 15 தோழர்களுக்கு மேல் விவாதத்தில், சிறந்த முறையில் பங்கெடுத்து குறைபாட்டை சுட்டிக்காட்டி துரிதமாக முன்னேறுவதற்கான ஆவலை காண்பித்தனர்.

இதன் பின், தொழிற்சங்க பகுதி அறிக்கையை சமர்ப்பித்து தோழர் உமாநாத் விளக்க உரை நிகழ்த்தினர். இதன்மீதும் உறுப்பினர் விவாதம் நல்ல முறையிலே நடத்தினர்.

இந்த அளவுடன் பொதுக்குழு இரவு 9 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது

இதற்கு முன், பொதுக்குழு உறுப்பினரும் திருச்சி நகர கமிட்டி செயற்குழு உறுப்பினருமான தோழர் வி. ராஜகோபாலின் மனைவி தோழர் சீதாலட்சுமி (கட்சி தோழர்) மரணமடைந்ததிற்கு அனுதாபத் தீர்மானம் அனைவரும் எழுந்து நின்று நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை தோழர் பாப்பா உமாநாத் பிரரேபித்தார்.

2-7-59 காலை முதல் இரவு 11 மணி வரையில் திருச்சி மாவட்ட நிர்வாகக் கமிட்டி கூடி பொதுக் குழுவிற்கான அறிக்கை, தீர்மானங்கள், நிகழ்ச்சி நிரல், உடனடி இயக்கம், கடமைகளை நிர்ணயித்தது. இக்கூட்டத்தில் மாகாண செயற்குழு சார்பாக தோழர் என். சங்கரையா பங்கெடுத்தார்

வரவேற்புக் கமிட்டியினர் ஏற்பாடுகள்

புதுக்கோட்டை நகரம் பூராவும் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளது. கண் நோக்குமிடமெல்லாம் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுக் குழு கூட்டம் விளம்பரங்கள் புதுக்கோட்டை, கொளத்தூர் தாலுகா, திருமயம், ஆலங்குடி நமனசமுத்திரம் பகுதி தோழர்கள், பொதுக் குழுவிற்கென ரூ 1000-த்திற்கு மேல் வசூலித்து, நல்ல முறையில் ஏற்பாடுகள் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இரவு 7 மணிக்கு திலகர் சதுக்கத்தில், "கேரள சர்க்காரும், காங்கிரஸின் ஜனநாயகமும்" என்ற பொருள் குறித்து. தோழர் கே. டி. ராஜு சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தினர் ஆயிரக்கணக்கில மக்கள் பங்கெடுத்தனர்

3-7-59 வெள்ளியன்று காலை 9 மணிக்கு கூடும் பொதுக்குழுவின் 2-ம் நாள் நிகழ்ச்சியின் முதலில் தோழர் வி. நாகு விவசாயப் பகுதி அறிக்கையை சமர்ப்பித்து விளக்கவுரை நிகழ்த்துவார். அதைத் தொடர்ந்து பல அரசியல், ஸ்தாபனக் கடமைகள் உருவாக்கப்படும்.

பெரம்பூர் ஒர்க்ஷாப் ஊழியர் கோரிக்கைகள்

சென்னை, ஜூலை 1—

பெரம்பூரில் தட்சிண ரயில்வேயைச் சேர்ந்த ஜில்லா சிக்னல்ஸ் டெலி கம்யூனிகேஷன் இன்ஜினீயர்ஸ் ஒர்க்ஷாப் சிப்பந்திகள் கூட்டமொன்று நடந்தது.

பெரம்பூரிலுள்ள மேமேலே கண்ட ஒர்க்ஷாப்பை நிரந்தரமாக்க வேண்டுமென்றும் சி.பி.சி இதர தாற்காலிக ஊழியர் பதவிகளை காயமாக்க வேண்டுமென்றும் இந்த ஒர்க்ஷாப்பில் தயாரிக்கக்கூடிய பண்டங்களைகண்ட்ராக்ட் முறையில் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட வேண்டுமென்றும் வேலையை போகனூர் ஒர்க்ஷாப்புக்கு மாற்றுவதையும் நிறுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழகத்திற்கு

கோவை நகரசபை வழிகாட்டுகிறது

மேலநம்மங் குறிச்சியில் ஹார்வி மில் போராட்டத்திற்கு ஆதரவு

மேலநம்மங் குறிச்சி, ஜூன் 28—

27-6-59 மாலை 6 மணிக்கு தோழர் ஆர். எம். செல்லத்துரை தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது, கூட்டத்தில் தோழர் பொ. முகிலன், சு. சுந்தரராஜன், கே. மாணிக்கவாசகம், எம். பி. கண்ணுசாமி, அத்திவெட்டி, கோவிந்தராஜன். வி பழனிவேல் முதலியோர் கேரளத்தில் மறு தேர்தல் நடத்த வேண்டும் என்று நேரு சொன்னதைக் கண்டித்தும் ஹார்விமில் தொழிலாளர்களை பழிவாங்கும் நிர்வாகத்தை கட்டுப்படுத்தி உடனடியாக ராஜ்ய முதல் மந்திரியும் தொழில மந்திரியும் தொழிற் சங்கங்களுடன் சமரசம் காண வேண்டும் என்றும் தமிழகத்தின் தொழிற்சங்க தலைவர்கள் கே டி. கே. தங்கமணி, எம் பி., பாலசுப்ரமணியம் ஆகியோரின் உண்ணாவிரதக் கோரிக்கையை நிறைவேற்றி அவர்களின் உயிரைப் பாதுகாக்க சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தீர்மான நகல் தொழிலமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மக்கள் நலனை முன்னிட்டு அரிய முடிவுகள்

அரசாங்கத்தின் ஆதரவு உடனே வேண்டும்

சர்வகட்சியினரின் ஏகோபித்த கோரிக்கை

கோவை, ஜூலை 3—

30-6-59-ந் தேதி கோவை நகர மன்றத்தின் அவசரக் கூட்டம் அன்று மாலை 6 மணியளவில் தோழர் எம். பூபதி (கம்யூ. சேர்மன்) தலைமையில் கூடியது.

டவுன் பஸ்களுக்கு வரி விதிக்கும் தீர்மானத்தை தோழர் ஆர். ரங்கசாமி (கம்யூ.) பிரரேபித்தார்.

நகரை அபிவிருத்தி செய்ய

இந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

"கோவை நகரம் தொழில் துறையில் வெகுவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது இதன் காரணமாக கோவை நகரம் பிரம்மாண்டமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இப்படி வளர்ந்துவரும் கோவை நகர மக்களுக்கு குடிதண்ணீர், சுகாதார வசதி, கல்வி போன்ற பல்வேறு வசதிகளும் செய்து கொடுக்க வேண்டிய இன்றியமையாத கடமை கோவை நகரசபைக்கேற்பட்டிருக்கிறது. இந்த இன்றியமையாத கடமையைச் செய்ய இன்றைய நகரசபையின் பொருளாதாரம் மிக மிகத் தாழ்ந்து, வீழ்ந்து கிடக்கிறது எனவே, இத்தகைய பொருளாதார நிலைமையை சீர்படுத்தி சிறந்ததோர் கோவை நகரத்தை சிருஷ்டிக்கவும், கோவை மக்களின் பல்வேறு நலவுரிமைகளைப் பேணி பாதுகாக்கவும், நகரசபையின் வருவாயை அதிகப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகியுள்ளது.

எனவே இந்த வருவாயை அதிகரிக்க கோவை நகரத்தில் ஓடுகிற டவுன் பஸ்களுக்கு பஸ் ஒன்றுக்கு 6 மாதத்திற்கு ரூ. 300 'பஸ் போக்குவரத்து' வரியாக விதிக்கலாமெனவும், இந்த வரி விதிப்பு சம்பந்தமாக பிரத்யேகமாக அனுமதியளிக்க வேண்டுமென்றும்—சென்னை அரசாங்கத்தை இக்கவுன்சில் கேட்டுக்கொள்கிறது."

இத்தீர்மானத்தை கவுன்சிலில் நிறைவேற்றினல் மட்டும்போதாதென்றும், அரசாங்கத்தோடு இதற்காகப் போராட வேண்டுமென்றும் திரு. எஸ் ஏ ராஜு மாணிக்கம் (தி.மு.க.) குறிப்பிட்டார்.

நாம் கவுன்சிலில் தீர்மானத்தைப் போட்டாலும் அரசாங்கம் அதை அங்கீகரிக்குமா? என காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஐயப்படுவதாக கூறினர்.

அதற்கு திரு. சு. ஆறுமுகம் (நகர மன்ற உப-தலைவர்) பதிலளிக்கையில் மக்களுடைய எண்ணங்களை இத்தீர்மானங்கள் பிரதிபலிக்கின்றன என்றார்.

தோழர் ஆர். ரங்கசாமி (கம்யூ) இது பற்றி குறிப்பிடுகையில், "நகர மன்றத்தின் நிதி நிலையை கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், பஸ் முதலாளிகளுக்கு 300 ரூபாய் பெரிய காரியமல்லவென்றும், இதனால் மக்களுக்கு அநேக நன்மைகளைச் செய்ய முடியுமென்றும் எடுத்துக் காட்டினர்.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சாதாரணமானவர்களுக்கு விதிவிலக்கு!

வருவாய்க்குத் தக்க வரி

2-வதாக தொழில் வரி விதிக்கும் முறையை மாற்றியமைக்கலாமெனக் கோரும் தீர்மானத்தை தோழர் ஆர். ரங்கசாமி பிரரேபித்தார்.

1. வருட வருவாய் ரூ 600-லிருந்து ரூ 1,200 வரையிலும் வரி வசூலிப்பதிலிருந்து விலக்களிக்கலாம்.
2. ரூ. 1,201 முதல் 1,800 வரை ரூ. 4-0-0.
3. ரூ 1,800-ம் அதற்கு மேல் 3,000 வரை ரூ 6-0-0.
4. ரூ 3,000-ம் „ 4,800 வரை ரூ. 12-0-0
5. ரூ. 4,800-ம் „ 6,000 வரை ரூ 25-0-0.
6. ரூ 6,000-ம் „ 9,000 வரை ரூ. 50-0-0.
7. ரூ 9,000-ம் „ 15,000 வரை ரூ. 100-0-0.
8. ரூ 15000-ம் „ 25000 வரை 250-0-0.
9. ரூ 25000-ம் „ 50000 ரூ. 500-0-0
10. ரூ 50000 அதற்கு மேலும் ரூ. 1000-0-0.

முன்புள்ள தொழில் வரி விதிக்கும் முறையை மாற்றியமைக்கலாமென இக்கவுன்சில் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது என்பது தான் தீர்மானம்.

இதன் பேரில் தோழர் ஆர். ரங்கசாமி (கம்) பேசுகையில், 92 லட்சம் ரூபாய் வருமானமுள்ள லட்சுமி மில்லுக்கு 120 ரூபாய் தான வரி விதிக்கப்பட்டிருப்பதாகவும், ஆகவே முன்பிருந்த வரி முறையை மாற்றியமைக்க வேண்டுமென சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

திரு. ராஜு நாயுடு (காங்) பேசுகையில், 250 ரூபாயெல்லாம் வரி விதிப்பது அதிக வரியாகுமென்றும், 125 ரூபாய்க்கு மேல் வரி விதிக்க அரசியல் சட்டத்திலேயே இடமில்லை என்றும், பார்லிமெண்ட் தான் அந்த சட்டத்தை மாற்ற வேண்டுமென்றும் கூறினர்.

முடிவில் மேற்படி தீர்மானம் 'பைனான்சியல் கமிட்டி'க்கு (நிதிக கமிட்டி) விடப்பட்டது.

அடுத்து பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்துவதற்கு உதவியாக இருக்கும் தீர்மான மொன்றை தோழர் ஆர். ரங்கசாமி (கம்) கொண்டுவந்தார்.

தீர்மானம்

1. "கோவை நகர போக்குவரத்தை நகரசபை எடுத்து நடத்தலாமெனவும், அப்படி நடத்துவதற்கு முதல் நடவடிக்கையாக கோவை ரீஜனல் டிரான்ஸ் போர்ட் அத்தாரிட்டி செயலாளர் அவர்களுக்கு விண்ணப்பித்து, ரிஜிஸ்டர் ஆபரேடராக பதிவு செய்து கொள்ளலாமெனவும் பதிவு செய்து கொண்ட தேதியிலிருந்து வரும் புதிய பஸ் ரூட்டுகளுக்கெல்லாம் விண்ணப்பிக்கலாமெனவும், விண்ணப்பித்த தேதியிலிருந்து புதியதாக 'சாங்ஷன்' செய்யப்படும் பஸ் ரூட்டுகளை கோவை நகரசபைக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொள்வதென இக் கவுன்சில் தீர்மானிக்கிறது"

2. கோவை நகரத்தில் ஓடுகிற நெ. 1, 2, 3 பஸ் ரூட்டுகளில் ஒவ்வொரு ரூட்டிற்கும் 2 பஸ்கள் வீதம் டவுன் பஸ் சர்வீஸ் நடத்த பிரத்யேகமாக மேற்படி ரூட்டுகளை 'சாங்ஷன்' செய்து கொடுக்க வேண்டுமென்று இக் கவுன்சில் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது. இந்தத் தீர்மானம் கவுன்சிலில் ஏகமனதாக நிறைவேறியது.

மாணவருக்கு வசதி

எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தவறிய மாணவர்களின் நன்மையை உத்தேசித்து அவர்களை மறுபடியும் சப்ளிமெண்டரி மாணவர்களாக சேர்ப்பதற்கு சிட்டி முனிசிபல் ஹைஸ்கூலில் ஆறுவது படிவத்தில் அதிகப்படியான வகுப்புகள் ஏற்படுத்துவது என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

கவுன்சில் கூட்டத்தில் பார்வையாளர்களாக இருபுறமும் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

சட்டப் பிரச்சினைகள் குறுக்கிட்டாலுங்கூட, பஸ் முதலாளிகள் மீதும் பெரிய தொழிற்சாலை அதிபர்கள்மீதும், இன்றுள்ள கோவை நகரசபை வரி விதிக்க எடுத்துக்கொள்ளும் முயற்சி ஏனைய நகரசபைகளுக்கெல்லாம், வரி விதிப்பு முறையில் ஒரு நல்ல வழிகாட்டியாகும் என்று, பார்வையாளர்களாக கலந்து கொண்ட பொதுமக்கள் பேசிக் கொண்டனர்.

3000 பீடித் தொழிலாளருக்கு வேலை கொடுக்கவில்லை

வேலூர், ஜூலை 2—

பீடித் தொழிலாளர் சட்ட அமுல் விஷயத்தில் பீடி முதலாளிகளின் சூழ்ச்சியால் 25 பாக்டரிகளில் வேலை செய்யும் 3000 தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது

பீடி இலைகளை தொழிலாளர்கள் வீட்டிற்கு கொடுத்தனுப்புவதை நிறுத்திவிட்டார்கள் பாக்டரிக்குள்ளேயே இலையைக் கத்தரித்து பீடி சுற்ற வேண்டுமென்று திடீர் உத்தரவு போட்டிருக்கின்றனர். இதனல் தொழிலாளருக்கு பாதகம். பாக்டரிக்குள் இலை கத்தரிக்க முடியாது என்று தொழிலாளர்கள் கூறிவிட்டார்கள். இதனல் 25 பாக்டரிகளில் 3000 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவில்லை

இச்சூழ்ச்சியை முறியடிக்க தொழிலாளர்கள் ஒன்றுபட்டிருக்கிறார்கள்,

பலாத்காரச் செயல்களுக்கு காங்கிரஸ் தலைமையே பொறுப்பு

கொள்ளைக் கூட்டத்தினர் பிடிபட்டனர்

சென்னை போலீஸ் நடவடிக்கை

சென்னை, ஜூலை 3— கல்கத்தா, மற்றும் பல ஊர்களைச் சேர்ந்த 6 பேர் இங்கசில் சில தினங்களாகப் பட்டப் பகலில் பூட்டியிருந்த பல வீடுகளில் புகுந்து அங்கிருந்த சொத்துக்களைக் கொள்ளையடித்துச் சென்று கொண்டிருந்தனர். இவர்கள் மூன்று மூன்று பேராகப் பிரிந்து இரண்டு கோஷ்டிகளாக இந்த வேலையை நகரில் செய்துகொண்டிருந்தனர், சைதாப்பேட்டை, டிப்ளாஸ்பேட்டை, மயிலாப்பூர், செந்தாமிரிப் பேட்டை, தியாகராய நகர் முதலிய பேட்டைகளிலேயே இவர்கள் பெரும்பாலும் இத்திருட்டுக்களை நடத்தி வந்தனர். இதன் பேரில் நமது சென்னை நகர போலீசார் ஜரூராக வேலை செய்ய ஆரம்பித்தனர், குற்ற இலாகா, சட்டம் ஒழுங்கு ஊழியர்கள் ஒன்றுசேர்ந்து அந்தந்த இடங்களில் மாறு வேடங்களில் நியமிக்கப்பட்டனர்.

சென்ற மாதம் 26-ந்தேதியன்று ராஜா அண்ணாமலைபுரத்தில் பூட்டப்பட்டிருந்த ஒரு வீட்டைக் கண்டு இந்தக் கூட்டத்தார் வந்தபோது அங்கிருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் இவர்களைப் பிடித்தனர். கான்ஸ்டபிள்கள் பிச்சைக்காரர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு இழிந்துபோன ஆடைகளைக் கட்டிக் கொண்டிருந்தனர். மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த டி. கிருஷ்ணா, கோபால்கிருஷ்ணா என்ற இருவரும் முதலில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் மற்றும் 3 பேர் ஒற்றைவாடைரோட்டில் இரண்டு தங்கும் விடுதிகளில் கைது செய்யப்பட்டனர். ஒருவன் தலைமறைவாகவிருக்கிறான். முதல் இருவரைப் பிடித்த கான்ஸ்டபிள்களின் நம்பர் 2310 3146. இவர்களின் பெயர் முனுஸ்வாமி, அக்கய்யஸ்வாமி. இவர்கள் மயிலாப்பூரைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் (குற்ற இலாகா.)

இந்தத் திருட்டுக் கோஷ்டியினர் நன்றாக உடை உடுத்திக் கொண்டு ரேடியோ என்ஜினீயர்கள் என்ற சொல்லிக் கொண்டு திரிந்தனர். இவர்கள் ஏப்ரல் மதல் ஜூன் மாதத்திற்குள்ளாக நகரில் 11 வீடுகளில் பூட்டை உடைத்துத் திருடியிருக்கின்றனர். திருடப்பட்ட பொருள்களை கல்கத்தாவிலும், வடக்கே மற்ற ஊர்களிலும் விற்றுவிடுவது வழக்கமாம். திருடப்பட்ட சுமார் 20,000 ரூபாய் பெறுமான தங்கம், வெள்ளி சாமான்களைக் கண்டுபிடிக்க குற்ற இலாகா டெபுடி கமிஷனர் கல்கத்தா சென்றுள்ளார்.

போலீஸ் பற்றி பனம்பள்ளியின் சட்டவிரோதமான பேச்சு

திருவனந்தபுரம், ஜூலை 4— கேரளத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட போலீஸ் எடுத்துவரும் நடவடிக்கைகளைப்பற்றி பனம்பள்ளி கோவிந்தமேனன் பின்வருமாறு கூறியுள்ளார்.

"தமக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒழுக்க விதிகளை சிவில் உத்தியோகஸ்தர்களும் போலீஸாரும் மீறி, ஆளும் கட்சியின் வழியில் செல்லத் தொடங்கி விட்டதாகவும் … ஆளும் கட்சியை ராஜிநாமாச் செய்யும்படி கோருவதாகவும். எனவே ஆளும் கட்சிக்குப் போலீஸ் பணியக்கூடாது என்று தான் கூறுவது நியாயமென்று பேசினர். (அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அரசாங்க உத்தரவுகளுக்குப் பணியக்கூடாது என்று கூறுவது பெரும் குற்றம் என முதலமைச்சர் நம்பூதிரிபாட் எச்சரித்ததை வாசகர்கள் அறிவார்கள். இதற்குப் பதில் கூறுகையிலேயே போலீஸ் பற்றி விசம மீண்டும் சட்டவிரோதமாகப் பனம்பள்ளி பேசியுள்ளார்.)

வேலைநிறுத்தம் நீடிக்கிறது

சென்னை, ஜூலை 2— சென்னையிலுள்ள நேஷனல் கிரிண்ட்லேஸ் பாங்கு ஊழியர் 242 பேர் இன்றும் வேலைநிறுத்தம் செய்தனர். டில்லியில் இப்பாங்கு ஊழியர்களும் தொழிற்சங்க தீவிரவாதிகளுமான அறுவரை வேலையிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்தே இந்த வேலைநிறுத்தம் நடக்கிறது.

இந்திய சபாநாயகர்

லண்டன், ஜூலை 3— இந்திய மக்கள் சபை சபாநாயகர் திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார் யூகோஸ்லேவியாவில் அந்நாட்டுப் பார்லிமெண்ட் தலைவரின் விருந்தினராக ஒரு வாரம் தங்கியிருந்து இன்று இந்தியாவுக்குப் புறப்பட்டார். (ராய்ட்டர்)

பார்லிமெண்டரி போர்டு தீர்மானத்திற்குப்பின் அக்ரமம்

இ. எம். எஸ்.- கவர்னர் சந்திப்பு

திருவனந்தபுரம், ஜூலை 4— கேரள முதல் அமைச்சர் இ. எம். எஸ். நம்பூதிரிபாட் இன்று கவர்னர் டாக்டர் பி. ராமகிருஷ்ண ராவைச் சந்தித்து ராஜ்ய நிலைமைபற்றி விவாதித்தார்.

அசாம் கவர்னர் உடல் நிலை

ஷில்லாங், ஜூலை 4— நோய்வாய்ப்பட்டுள்ள அசாம் கவர்னர் சையது பாஸல் அலியின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளது என நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது. இன்று காலை வரை உடல் நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என ராஜ்பவன் செய்தியொன்று கூறுகிறது.

மாஸ்கோவில் ஹோசி-மின்

மாஸ்கோ, ஜூலை 3— வட வியட்நாம் ஜனாதிபதி ஹோசி-மின் ரஷ்ய ஜெட்விமானமொன்றில் நேற்று மாஸ்கோ வந்து சேர்ந்தார். அவர் இங்கு ஓய்வு எடுத்துக் கொள்வார்.

ரணதிவே, கோபாலன் குற்றச்சாட்டு

பாலக்காடு, ஜூலை 4—

இன்று கேரளத்தில் நடக்கும் பலாத்காரச் செயல்கள் அனைத்துக்கும் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டும் காங்கிரஸ் மேலிடமும் முழு பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கம்யூனிஸ்ட் தலைவர்கள் தோழர்கள் பி. டி. ரணதிவேயும், ஏ. கே. கோபாலனும் இன்று செய்தி நிருபர்கள் மகாநாட்டில் குற்றஞ்சாட்டினர். டில்லியிலிருந்து திரும்பியதும் கேரள காங்கிரஸ் தலைவர் ஆர். சங்கர் மத்திய சர்க்கார் தலையிடுமென்றும் ஆகவே கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தும்படியும் அறிக்கை விடுத்ததால் பலாத்காரச் செயல்கள் நிகழ்கின்றன என்பதையும் இரு கம்யூனிஸ்ட் தலைவர்களும் சுட்டிக் காட்டினர்.

தோழர்கள் பி. டி. ரணதிவேயும், ஏ. கே. கோபாலனும் நிருபர்களிடம் அறிவித்ததாவது:

"பாடசாலைகள், பஸ்கள் முன்பு மறியல் நடத்தவேண்டாமென்றும் அடையாள பூர்வமாக மறியல் நடக்கிறது என்ற பெயருக்காக மறியல் செய்யலாமென்றும் காங்கிரஸ் மேலிடம் திட்டவட்டமாகக் கேரள காங்கிரஸ்காரர்களுக்கு உத்தரவுகள் பிறப்பித்தது. அப்படியிருந்தும், கேரள காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஆர் சங்கர் டில்லியில் இருந்து திரும்பியதும் ஓர் அறிக்கை வெளியிட்டார். மத்திய சர்க்கார் நிச்சயம் கேரள விவகாரத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமென்றும், ஆகவே அதற்கு ஏற்ப கிளர்ச்சியைத் தீவிரப்படுத்த வேண்டுமென்றும் ஆர். சங்கர் தமது அறிக்கை மூலம் வற்புறுத்தினர். இவ்விதத் தூண்டுதலால் பலாத்காரச் செயல்கள் நிகழ்கின்றன. எனவே இன்று கேரளத்தில் நிகழும் பலாத்காரச் செயல்களுக்கெல்லாம் காங்கிரஸ் தலைமையே பொறுப்பு ஏற்க வேண்டும்.

கிளர்ச்சிக்காரர்கள் பலவந்தமாக பள்ளிகளில் பிரவேசித்து, குழந்தைகளை வெளியே தூக்கி எறிகின்றனர்; மாணவர்களைத் தாக்குகின்றனர். பஸ்கள் மீது கற்களை வீசுவதுடன், கார்களை வழிமறித்து நிறுத்தி பலவந்தமாகப் பணம் வசூலிக்கின்றனர்.

காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டின் தீர்மானமும் திரு. ஆர். சங்கரின் அறிக்கையும் சர்க்கார் ஊழியர் விஸ்வாசத்தையும் கடமையுணர்ச்சியையும் குலைத்துவிட்டனவென்றே கூறுவோம்.

சில எதிர்க்கட்சிகள் புதுத்தேர்தலை விரும்புவதால், அதனை முன்னிட்டு தேர்தல்கள் நடத்துவது முறை அல்ல. அரசியல் அமைப்புச் சட்டத்தில் இவ்வித தேர்தலை அநுமதிக்கும் ஷரத்து எதுவுமில்லை. ஆகவே கேரள மந்திரி சபை ராஜிநாமா செய்யவே போவதில்லை.

மதவெறியைக் கிளப்பிவிடுகின்றனர்

நாயர் சேவா சங்கமும் கத்தோலிக்க கிறிஸ்துவரும் முஸ்லிம் லீகும் மதவெறியைக் கிளப்பி வருகின்றனர் இது மக்கள் எழுச்சியோ மக்கள்கிளர்ச்சியோவல்ல. ஆகவே மத்திய சர்க்கார் தலையிட்டால், அச்செயல் அரசியல் அமைப்புச் சட்ட விதிகளுக்குப் புறம்பானதாகும். அவ்விதம் அரசியல் விதிகளை மீறி நடந்து மத்திய சர்க்கார் தலையிடுமானால் இந்தியாவில் காங்கிரசல்லாத வேறு சர்க்கார் இயங்குவதற்குக் காங்கிரஸ் அனுமதிக்காது என்பதாக ஏற்படும். இதர ராஜ்யங்களிலும் இவ்வித பலாத்காரக் கிளர்ச்சிகளுக்கு ஊக்கமளிப்பதாகவிருக்கும். அதோடு ஜனநாயக ரீதியில் ஆட்சிபுரிய காங்கிரஸிற்குத் தகுதியே இல்லை என்பதாகவும் நிரூபிக்கப்படும்.

மக்கள் எதிர்ப்புப் போர்

கேரளக் கிளர்ச்சி, சாதாரண மக்களை எதிர்த்து ஏகபோக உரிமையாளர்கள் நடத்தும் அரசியல் இயக்கமே ஆகும். கேரள சர்க்கார் நீடித்தால், சாதாரண மக்களுக்கு உகந்த சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்படும். இதைத் தடுக்க இக்கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கின்றனர்.

இரு தலைவர்களும் மேலும் கூறியதாவது:

"கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்துவதற்காகக் கேரளத்தில் எந்தச் சட்டமும் நிறைவேற்றப்படவில்லை. பிளாக் ஏரியாக்களில் தொழிலாளர்களே தொழில் தொடர்பு சொஸைட்டிகளை அமைத்திருக்கின்றனர். பிளாக் அபிவிருத்தி அதிகாரிகள் இவற்றின் தலைமை அதிகாரிகளாக இருக்கின்றனர்.

"துப்பாக்கிப்பிரயோகம் சம்பந்தமாக நீதி விசாரணை கோர காங்கிரசுக்கு உரிமை கிடையாது. இருப்பினும் இப்போதுகூட கிளர்ச்சி நிறுத்தப்பட்டால் விசாரணைக்கு ஏற்பாடு செய்வதாக ராஜ்ய முதலமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார். 1947க்குப்பின் இந்தியாவின் பல்வேறு ராஜ்யங்களிலும் 1500 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றுள்ளன; காங்கிரஸ் ஆளும் எந்த ராஜ்யத்திலும் ஒரு நீதி விசாரணைகூட நடைபெற்றதில்லை.

"கேரளத்தில் இப்போது நடைபெறும்கிளர்ச்சி காங்கிரஸ், சர்ச்சுகள் இதர அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் அடியாட்களாலேயே நடத்தப்படுகிறது. அவர்களுடைய காலித்தனத்தை எல்லா ஜனப்பகுதிகளும் வெறுக்கின்றனர். தேசபக்தியுடைய யாரும் இதை ஊக்குவிக்கமாட்டார். இக் கிளர்ச்சி நிச்சயம் பிசுபிசுக்கும்.

"கேரள அரசாங்கம் ஸ்தம்பிக்க வைக்கப்படவில்லை."

7-ந் தேதி சென்னை பாங்குகளில் ஒரு மணி நேர அடையாள வேலைநிறுத்தம்

பாங்க் ஊழியர் சம்மேளனத்தின் அறிக்கை

சென்னை, ஜூலை 4— சென்னை மாகாண பாங்க் ஊழியர்களின் சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசி என். சம்பத் விடுக்கும் அறிக்கை:

"சென்னை மாகாண பாங்க் ஊழியர்கள் சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசியின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை நகரிலிருக்கும் சுமார் 1000 பாங்க் ஊழியர்கள் 10 நாட்களாக நேஷனல் பாங்க் ஊழியர்கள் நடத்தும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டு நேஷனல் பாங்கின் முன், 6 டெல்லி பிராஞ்ச் ஊழியர்களை திருப்பி எடுக்கக் கோரி ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதற்குப் பிறகு தமிழ்நாடு தொழிற்சங்கக் காங்கிரசின் செயலாளர் தோழர் டி. ஆர். கணேசன் இந்தப் போராட்டத்தைப் பாராட்டிப் பேசினர். இந்தப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாகத் தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரசின் சார்பாக அவர் உறுதி கூறினர்.

பிறகு அகில இந்திய பாங்கு ஊழியர்கள் சம்மேளனத்தின் துணைச்செயலாளர் திரு ஜோசப் சென்னை மாகாண பாங்க் ஊழியர்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் என். சம்பத், நேஷனல் கிரிண்ட்லேஸ் பாங்க் ஊழியர்களைப் பாராட்டியும் சென்னையிலுள்ள எல்லா பாங்க் ஊழியர்களும் அவர்களுக்கு ஆதரவு அளிக்க முன் வருவார்களென்றும் கூறி முடித்தார்.

பிறகு சென்னை மாகாண பாங்கு ஊழியர்கள் சம்மேளன மத்தியக் கமிட்டியும் இணைக்கப்பட்ட சங்கங்களின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களும் கொண்ட ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் போராட்டம் நடத்தும் நேஷனல் பாங்கு சிப்பந்திகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சென்னை நகரிலுள்ள பாங்கு சிப்பந்திகள் அனைவரும், இந்த மாதம் 7ந் தேதி செவ்வாய்க்கிழமை அன்று ஒரு மணி நேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்வதென முடிவெடுக்கப்பட்டது. இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்களுக்கு நாங்கள் வருந்துகிறோம். ஆனால் இந்த அநாகரிகமான நிலைமை உருவாவதற்கு முழுப் பொறுப்பு பாங்கு மானேஜ்மெண்டாருடையது. ஆதலால் பொதுமக்கள் இந்த விவகாரத்தில் திருப்திகரமான ஒரு முடிவு காண மானேஜ்மெண்டாரை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

கேரள எதிர்க்கட்சிகளின் பொறுப்பற்ற போக்கு!

திருவனந்தபுரம், ஜூலை 3— இன்று இங்கு கூடிய ராஜ்ய உணவு ஆலோசனை போர்டு கூட்டத்திற்குக் கேரள எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் யாரும் வரவில்லை.

கூட்டத்திற்கு உணவு அமைச்சர் தோழர் கே. சி. ஜார்ஜ் தலைமை வகித்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளும், சர்க்கார் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், ராஜ்யத்தின் எதிர்கால உணவுத் தேவைகள்பற்றி விவாதிக்கப்பட்டது; மேலும் கேரளத்திற்குத் தேவையாயுள்ள உணவு சப்ளைகளைப் பற்றி இந்திய சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதென்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்றும் கே. சி. ஜார்ஜ் கூறினர்.

இந்த உணவு ஆலோசனை போர்டில் சர்க்கார் மெம்பர்களைத் தவிர, கம்யூனிஸ்ட், காங்கிரஸ், பி. சோ., ஆர். எஸ். பி., ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

நேரு - மென்ஸீஸ் பேச்சு

புதுடில்லி, ஜூலை 4— பிரதமர் நேருவும், ஆஸ்திரேலிய பிரதமர் மென்ஸீஸும் இன்றும் மீண்டும் சந்தித்துப் பேசினர். உலக அரசியல்பற்றி அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இன்று காலை ஆஸ்திரேலியப் பிரதமர், ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத்துடன் விருந்துண்டார். —பி டி ஐ

காலபந்தாட்டம்.

கண்ணனூர் கோஷ்டியின் அருமையான ஆட்டம்

சென்னை ஜூலை 4— கண்ணனூர் கால்பந்தாட்டக் கோஷ்டியில இருக்கும் விளையாட்டுக்காரர்கள் இளைஞர்களாகக் காணப்பட்டாலும் அவர்கள் ஆடும் ஆட்டம் ரஸிகர்களை மிகவும் கவர்ந்து விட்டது. விம்கோ கோஷ்டியோடு நடந்த போட்டியின் அபாரமாக ஆடி வெற்றி தோல்வியின்றி இன்று ஆட்டம் முடிந்தது. விம்கோ கோஷ்டி வழக்கம்போல் நன்றாக ஆடியது. இரு கோஷ்டிகளுக்கும் கோல்போட பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் பயனில்லாமல் போய்விட்டன. முதல் கோல் விம்கோ கோஷ்டி முற்பகுதியில், இடது கடைசி ஆட்டக்காரர் வில்லியம்ஸ், தனக்கு கிடைத்த பந்தை எடுத்து தரையோடு கோல் கம்பம் நோக்கி வேகமாக அடித்தார். கண்ணனூர் கோலர் வேணுகோபால் கையால் தடுத்தும் அதே வேகத்தில் பந்து உள்ளே சென்றுவிட்டது. கண்ணனூர் கோஷ்டி ஆட்ட பிற்பகுதியில், வலது உள் விளையாட்டுக்காரர் புருஷோத்தம் தனக்கு கிடைத்த பந்தைக் காலால் தடுத்து வேகமாக கோல் கம்பம் நோக்கி அடித்தார். விம்கோ கோலர் மூர்த்தி பந்தைக் கையால் தடுத்து. ஓரளவு பிடித்தும், பந்தை கோல் கம்பம் உள்ளே நழுவவிட்டதால் கோலாக்கிவிட்டது. ஆகவே இரண்டு கோஷ்டிக்கும் விழுந்த கோலை ஒரே முறையில் விழுந்தது என்று சொல்லாம். இந்த இரண்டு கோஷ்டிக்கும் மறு போட்டி நாளை நடைபெறும்.

—என். கே. பாலகிருஷ்ணன்.

அமுல்தேசாய்க்கும் கே. பி. மேனனுக்கும் தண்டனை

கள்ளிக்கோட்டை, ஜூலை 4— இன்று இங்கே கலெக்டர் காரியாலயம் முன்பு மறியல் செய்த பிரஜாசோஷலிஸ்ட் தலைவரும் பார்லிமெண்டு உறுப்பினருமான டாக்டர் கே. பி மேனனும், பம்பாய் பி. சோ. தலைவர் டாக்டர் அமுல் தேசாயும் மற்றும் 24 பேரும் இன்று பிற்பகல் 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் முன்பு ஆஜர் செய்யப்பட்டனர் அனைவருக்கும் தலா ஒருவார வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவுப்புள்ளி

சென்னை, ஜூலை 3 — 20-6-59-ல் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினரின் வாழ்க்கைச் செலவு 1 புள்ளி உயர்ந்து 433-ல் நின்றது. அரிசி விலை உயர்வே இதன் முக்கிய காரணமாகும்.

கேரள விவகாரம்பற்றி விவாதிக்க ஏன் தடைவிதிக்கக்கூடாது?

கல்கத்தா கார்ப்பொரேஷனுக்கு ஹைகோர்ட் ரிட் நோட்டீஸ்

கல்கத்தா, ஜூலை 3— கேரள விவகாரங்கள் பற்றி இரு கவுன்சிலர்கள் கொணர்ந்துள்ள தீர்மானங்களை விவாதிக்க ஏன் தடைவிதிக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு கல்கத்தா ஹைகோர்ட் கார்ப்பொரேஷனுக்கும் மேயருக்கும் மற்றும சிலருக்கும் நோட்டீஸ் பிறப்பித்துள்ளது

கார்ப்பொரேஷனுக்கு வரி செலுத்தும் நரேந்திர ராவ் சக்ரவர்த்தி என்பவர் தாக்கல் செய்த ரிட் மனு ஒன்றின்பேரில் நீதிபதி மேற்கண்ட நோட்டீஸ் பிறப்பித்துள்ளார்.

கேரள நிர்ப்பந்தத்தை ஆதரித்து ஒரு மெம்பரும் கேரள சர்க்கார் ராஜினமாச் செய்யக் கோரி மற்றொரு மெம்பரும் தீர்மானங்கள் கொணர்ந்துள்ளனர் இத்தீர்மானங்கள் நாளை விவாதிக்கப்படவிருக்கின்றன.

உத்தேச தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், தடை விஷயம் பைசலாகும்வரை தீர்மானங்களுக்கு விளம்பரமோ, அதற்கு அமுலோ கொடுக்கக்கூடாது என்று நீதிபதி இடைக்கால தடையொன்றும் பிறப்பித்துள்ளார்.

பலாத்காரவாதிகளின் மாய்மாலம்

திருவனந்தபுரம், ஜூலை 4— எதிர்க்கட்சி எம்.எல் ஏக்கள் பஞ்சாயத்து, முனிசிபல் உறுப்பினர் ஆகியோரை ஜூலை 15-ல் அழைத்து, மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி காங்கிரஸ் முடிவு செய்யப்போகிறதாம்! இது கேரளக் காங்கிரஸ் இன்று எடுத்த முடிவு.

கேரளத்தில் இதுவரை நடந்துள்ள பலாத்காரங்களை எல்லாம் சாத்வீக போராட்டங்கள் என்றும் போலீஸ்தான் பலாத்காரமாக நடப்பதாகவும் இன்னொரு தீர்மானம் கூறுகிறது.

கான்பூர் மில்லை அரசாங்கம் ஏற்றது

புதுடில்லி, ஜூலை 4— தொழில் ஒழுங்கு சட்டத்தின் (1951) 18-ஏ விதியின்படி கான்பூரிலுள்ள ஆதர்டன் வெஸ்ட் மில்லை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. மில்லின் அதிகாரபூர்வமான கண்ட்ரோலராக எஸ். கே. சவுத்திரி ஐ. ஏ. எஸ். நியமிக்கப்பட்டுள்ளார்.

கேரளக் காங்கிரசின் 'போராட்டம்'

மீண்டும் டெல்லிக்குக் காவடி

திருவனந்தபுரம், ஜூலை 4— கேரளத்தில் இன்றும் பல இடங்களில் மறியல் நடந்தது. பெண்கள் உள்பட 20 பேர் கைது செய்யப்பட்டனர், கோர்ட்டில் நிறுத்தப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டது.

திருவனந்தபுரம் ஜில்லாவில் சப்ரிஜிஸ்டிரார் ஆபீஸ் முன்பு மறியல் செய்து சிறையில் தண்டனை அனுபவிக்கையில் ஒரு தொண்டர் மரணமடைந்தார். இயற்கையான காரணத்தால் மரணம் நேர்ந்தது என்று கலெக்டர் அறிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் மன்னத் பத்மநாபன் கேரள சர்க்காரை எதிர்த்து கலகங்களில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. கேரள காங்கிரசு கலகங்களைத் தூண்டிவிட்டு வருகிறது.

பத்மநாபனும் கேரளக் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் போலீஸ் எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றி டில்லி காங்கிரஸ் தலைமைக்குத் தந்திகள் அனுப்பி வருகின்றனர்.

குற்றப்பத்திரிகை

குற்றப்பத்திரிகையே இல்லாமல் இதுவரையில் குற்றப்பத்திரிகை இயக்கம் பற்றி கூறி வருகிறதல்லவா? இப்பொழுது அந்தக் குற்றப்பத்திரிகை தயாராகிவிட்டதாம்! ஸ்ரீ. சங்கர் அதைத் தூக்கிக் கொண்டு டெல்லிக்குச் சென்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப் போகிறாராம். இதே குற்றப் பத்திரிகையை பி. டி. சாக்கோ ஈ.எம்.எஸ்.கவர்னரிடம் கொடுக்கப்போகிறாராம்.

சோவியத் கண்காட்சியில் ஒரே ஜனத்திரள்

நியூயார்க், ஜூலை 3— இங்கு நடைபெற்றுவரும் சோவியத் கண்காட்சியைப் பார்க்க அமெரிக்க மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு வருகிறார்கள்.

காங்கிரஸ் தலைமையின் ஒரு பகுதி கேரளத்தில் மத்திய சர்க்கார் தலையிட வேண்டுமென்கிறது

மதுரையில் கோவிந்தன் நாயர் பேட்டி

மதுரை, ஜூலை 3— கேரளக் கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசி தோழர் எம். என். கோவிந்தன் நாயர், டில்லியில் ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத், உள்நாட்டு மந்திரி பந்த் ஆகியோரை சந்தித்துப் பேசியபின், மதுரை வழியாகத் திருவனந்தபுரம் சென்றார்.

மதுரையில் பி. டி. ஐ. நிருபர், அவரைப் பேட்டி கண்டபோது, டில்லியில் காங்கிரஸ் தலைமையின் ஒரு பகுதி கேரளக் காங்கிரசுக்கு ஆதரவாக இருப்பதாகவும் அவர்கள் கம்யூனிஸ்ட் மந்திரி சபைக்கு விரோதமாக மத்திய சர்க்கார் கேரளத்தின் தலையிட வேண்டுமென்று விரும்புகிறார்கள், என்று கூறினர்.

மத்திய சர்க்காரின் தலையீடு தேவைப்படக்கூடிய ஒரு நிலைமையை உண்டாக்குவதற்காக அவர்கள் விரும்புவதாகத் தெரிகிறது, என்றும் கோவிந்தன் நாயர் கூறினர்.

தான் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியதற்கு எவ்வித விசேஷ முக்கியத்துவமும் கற்பிக்கக் கூடாது என்று கூறிய அவர், சொந்த காரணங்களுக்காகத் தான் டில்லிக்குச் சென்றதாகவும், அந்த சந்தர்ப்பத்தை, ஜனாதிபதியையும், உள்நாட்டு அமைச்சரையும் சந்திப்பதற்கு பயன்படுத்திக் கொண்டதாயும் கூறினர்.

கேரள சர்க்காருக்கு எதிராக நடத்தப்படும் கிளர்ச்சி எந்த உருவத்தில் நடத்தப்படவேண்டும், என்பது சம்பந்தமாகக் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டின் ஆலோசனைக்கும், கேரளக் காங்கிரஸ்காரர்களின் நடத்தைக்கும் இடையில் முரண்பாடு இருக்கிறதென்றார். கிளர்ச்சி அடையாளபூர்வமாகத் தான் இருக்கவேண்டுமென்று பார்லிமெண்டரி போர்டு கூறியிருக்கிறது ஆனால் கேரளக் காங்கிரஸ்காரர்கள் பலாத்கார வழியில் இயக்கத்தை தீவிரப்படுத்திவருகிறார்கள்.

கேரளத்தில் இன்று மீண்டும் தேர்தல்கள் நடைபெற்றால் கம்யூனிஸ்ட் கட்சி முன்னைக்காட்டிலும் அதிக ஓட்டுகள் பெறும் என்றும் கோவிந்தன் நாயர் கூறினர்.

கேரளத்தில் எதிர்க்கட்சிகளுடன் ஏதாவது சமரஸம் சாத்தியமா என்று கேட்டதற்கு, "மந்திரிசபை ராஜினமா செய்ய வேண்டுமென்ற கோரிக்கையுடன் எவ்வித சமரஸமும் சாத்தியமில்லை. கல்விச் சட்டத்திலேயோ அல்லது வேறு எந்தச் சட்டத்திலேயோ சர்ச்சைக்குரிய ஏதாவது பகுதிகளின்மீது மட்டும்தான் சமரஸம் சாத்தியம்" என்று கோவிந்தன் நாயர் கூறினர்.

இந்தக் கிளர்ச்சியின் காரணமாகக் கேரள சர்க்காரின் நடவடிக்கைகள் ஏதாவது பாதிக்கப்பட்டுள்ளனவா என்று கேட்டதற்கு, இந்தக் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் கேரள ராஜ்யத்தில் சுமார் 300 சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் தற்பொழுது சர்க்காரின் கவனம்வேறு பக்கத்தில் இழுக்கப்பட்டுள்ளதால், தற்பொழுது அதிகம் செய்வதற்கில்லை என்றார்.

நீர் மட்டம்

சென்னை, ஜூலை 4—

மேட்டூர்	3-7-59	82·4
பெரியாறு	2-7-59	31·5
வைகை	2-7-59	55·5
பாபநாசம்	2-7-59	87·1
கிருஷ்ணகிரி	3-7-59	29·6
சாத்தனூர்	3-7-59	48·7
மணிமுத்தாறு	2-7-59	76·1



சென்னை-1

7—7—59

காலை முதல் ஒலிபரப்பு

6-55 மங்கள இசை 7-00 துதிப்பாடல்கள் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், வானிலை அறிவிப்பு 7-15 தமிழில் செய்தி 7-30 வி. எல். வேதகிரி வயலின் 8-00 மதுரகீதம் 8-15 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1-00 தேவாரம் 1-15 வாத்ய கோஷ்டி 1-30 கானமஞ்சரி 1-40 ஹிந்தியில் செய்தி 1-50 இசைச் செண்டு, 2-00 தமிழில் செய்தி, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு 2-40 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

மாலை மூன்றாவது ஒலிபரப்பு

5-30 Running Commentary on The 3rd Cricket Test Match between India and England At Leeds (Relay from B. B. C.) 6-05 பிராந்தியச் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள், (திருச்சி அஞ்சல்) 7-15 தமிழில் செய்தி 7-30 திரை கானம் 7-45 மன்னார்குடி கே. சாவித்திரி அம்மாள் கோட்டு வாத்யம், திருக்கோகர்ணம் எஸ். உலகநாதன் வயலின், காரைக்குடி நடேசய்யர் மிருதங்கம் (திருச்சியில உள்ளபடி) 9-00 இசை மாலை 9-15 ஹிந்தி பாடம் (தெலுங்கு) 9-30 மெல்லிசை (திருச்சியில உள்ளபடி) 9-50 ஒலி ஏடு சஞ்சிகை நிகழ்ச்சி 10-30 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

7—7—59

காலை முதல் ஒலிபரப்பு

7-00 இசைக் கதிர் துதிப் பாடல்கள் 7-10 நிகழ்ச்சி குறிப்புகள் 7-15 தமிழில் செய்தி 7-30 மாயூரம் கே. ராமசாமி பாட்டு 8-00 ஆங்கிலத்தில் செய்தி 8-15 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1-00 இசை வேளை 1-40 ஹிந்தியில் செய்தி 1-50 புல்லாங்குழல் 2-00 தமிழில்செய்தி 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு 2-40 இடைவேளை 2-45 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

மாலை மூன்றாவது ஒலிபரப்பு

4-45 விவித பாரதி, கர்நாடக சங்கீத நிகழ்ச்சி பம்பாய் அஞ்சல் 5-45 இசைப் பயிற்சி 6-00 அறிவிப்புகள், 6-05 பிராந்தியசெய்திகள், 6-15 கிராம நிகழ்ச்சிகள், 7-15 தமிழில் செய்தி, 7-30 முன்னேற்றம்-குடும்பவாழ்க்கை பேச்சு 7-45 மன்னார்குடி கே. சாவித்திரி அம்மாள் கோட்டு வாத்யம், திருகோகர்ணம் எஸ். உலகநாதன் வயலின், காரைக்குடி நடேச அய்யர் மிருதங்கம் 9-00 ஆங்கிலத்தில் செய்தி 9-15 சன்யாசமே வைபோகமே நாடகம் (மதராஸ் 2 அஞ்சல்) 9-30 மெல்லிசை 9-50 ஒலி ஏடு சஞ்சிகை நிகழ்ச்சி (மதராஸ் 1-ல உள்ளபடி) 10-00 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது திட்டத்தில் சமுதாய அபிவிருத்தி வேலைகள்

புதுடெல்லி, ஜூலை 4— மூன்றாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் சமுதாயவளர்ச்சித்திட்டத்துக்கு ரூ. 400 கோடி செலவிடுவதென மதிப்பிடப்பட்டிருக்கிறதென யூனியன் சமுதாய வளர்ச்சித்துறை அமைச்சர் எஸ். கே. டே இங்கு நிருபர்களிடம் பேசுகையில் அறிவித்தார்.

கேரளக் கிளர்ச்சிக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டுப் பதிவின்போது சில இடங்களில் 98 சதவிகிதம் வாக்காளர்கள் சென்று ஓட்டுப் பதிவு செய்யும் அளவுக்கு அரசியல் வளர்ச்சியுள்ள கேரளத்திலேயே இப்படி மிரட்டினால். 20 சதம் படித்த மக்களைக் கொண்ட தமிழ் நாட்டிலும் இதர ராஜ்யங்களிலும் எப்படித்தான் மிரட்டமாட்டார்கள்?

ராஜினமா செய்தால் மறுதேர்தல் வராது

முதலில் ராஜினமா செய்யும்படி சொல்லுகிறார்கள். இது எதற்காக? ராஜினமா செய்துவிட்டால் ஜனாதிபதி ஆட்சி ஏற்படும். கம்யூனிஸ்ட் சர்க்காரே மறுதேர்தல் நடத்த முடியாது போகும். அந்த நிலைமையில கம்யூனிஸ்டுகளை கொலைகாரர்கள் கொள்ளைக்காரர்கள், குறுக்கே போனார்கள், நெடுக்கே போனார்கள் என்று குற்றம் சாட்டி சிறையிலடைத்து விடலாம். அப்புறமாவது மறுதேர்தல் நடக்கப்போகிறதா? நாட்டில் கொதிப்பு நிலைமை நீடிப்பதால், இப்பொழுது மறுதேர்தல் வைப்பதற்கில்லை யென்று வருடக்கணக்கில் ஒத்திப் போடுவார்கள் அதாவது மறு தேர்தல் என்ற ஜனநாயகப் பேச்சின் அர்த்தமானது, தனி மனித சர்வாதிகாரத்தை நீடிக்கவும், அடுத்த பொதுத் தேர்தல் வரையும மறு தேர்தல் இல்லாது ஆக்கவும் தான் சூழ்ச்சி செய்யப்படுகிறது.

இது ஜனநாயகப்பிரச்சினை

ஆகவே கேரளப் பிரச்சினையானது, கம்யூனிஸ்டா அல்லது கம்யூனிஸ்ட் எதிர்ப்பா என்ற பிரச்சினையல்ல. தர்மம், நெறி, ஒழுக்கம் ஜனநாயகம், நாணயம் பற்றிய பிரச்சினையாகும்.

எனவே கேரளக் கிளர்ச்சியை நான் தீவிரமாக கண்டிக்கிறேன். எதிர்க்கிறேன்" என்றார்.

(மற்றவர் பேச்சு விபரம் பின்னர்.)

ஜனசக்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர் எம். கிருஷ்ணசாமி. ஆசிரியர்: ப. ஜீவானந்தம். முகவரி: 13, பிராட்வே சென்னை-1. Janasakthi Broadway Madras-1